விலை ரூபா 2-00 ★

10 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 சித்திரை 23 ஷஃபா 14 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (5—5—85) இதழ் 84


## கிழக்கு மாகாண நிலைமை
## முஸ்லிம் தலைவர்கள் தமிழகம் செல்வர்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் தமிழர் — முஸ்லிம்களுக்கிடையே ஏற்பட்டுள்ள பிரச்னை குறித்து, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடனும், தமிழீழ விடுதலை இயக்கங்களின் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த முஸ்லிம் தலைவர்களைக் கொண்ட குழு ஒன்று (10ம் பக்கம் பார்க்க)

# ● காரைநகரில் நடந்த பலமணி நேரச் சம்பவம்
# யாழ்ப்பாணத்தைக் கலக்கிய 'இடி முழக்கங்கள்!'

## ஒன்பது மணிநேரத் தாக்குதல்
### மக்கள் கிலிகொண்டு வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

**காரைநகரில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் ஆகாய மார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் கடும் தாக்குதல்கள் இடம்பெற்றதாகத் தெரியவந்துள்ளது.**

நேற்று முன்தினம் இரவு 9 மணி தொடக்கம் காலை ஆறு மணிவரை (சுமார்ஒன்பதுமணி நேரம்வரை) நடந்த இடியோசை 'முழக்கங்கள்' பல மைல் சுற்று வட்டத்திற்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியதுடன் பீதியையும் கிளப்பிவிட்டது!

காரைநகர் மேற்குவீதி-கருங்காலி கிராமப் பகுதியும் அதன் சுற்றுப்புறமுமுள்ள வீடுகள், குடிமனைகளும் பலத்த சேதத்திற்குள்ளானதாகவும், அங்கு வசித்த மக்களில் பலருக்கு என்ன நடந்ததென்று அறிய முடியாமலிருப்பதாகவும் அஞ்சப்படுகிறது.

கீரிமலை வலித்தூண்டல், சேந்தான்குளம் பகுதியில் இரு மதகுகளும், யாழ்-மண்டைதீவுப் பாதையும் குண்டுகள் வைத்துத் தகர்க்கப்பட்டதால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

காரைநகரில் தொடர்ச்சியாக வெடித்த குண்டுகளின் எதிரொலி யாழ்ப்பாணத்தைக் கிலிகொள்ளச் செய்துவிட்டது!

யாழ். நகரிலும் நேற்று முன்தினமிரவு குண்டு வெடிச் சத்தங்களும், துப்பாக்கி வெடிச் சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன.

கொட்டடியில் உள்ள ஒரு வீட்டில் திடீர் என்று வந்து விழுந்தபொருள்ஒன்று வெடித்ததால் அவ்வீடு பலத்த சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேபோல் குருநகரிலும் ஒருவீடு பலத்த சேதமடைந்துள்ளது.

வீட்டிலிருந்தோர் வீட்டுக்கு வெளியில் நின்றதால் தெய்வாதீனமாக அவர்கள் உயிர்தப்பினர் என்று சொல்லப்படுகிறது.

காரைநகரில் சில கிராமங்களில் இருந்து குடும்பம் குடும்பமாக மக்கள் வெளியேறியுள் (10-ம்பக்கம் பார்க்க)

## பலியானோர் விபரம்:
## அரசு அறிக்கை தகவல்

(கொழும்பு)

காரைநகரில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் 3கடற்படைவீரர்களும், 25 தீவிரவாதிகளும் மாண்டதாகராஜாங்க அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 9-30 மணிதொடக்கம் நேற்று அதிகாலை வரை நீடித்ததாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

மேலும் 10 கடற்படைவீரர்கள் காயமடைந்ததாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

இறந்த தீவிரவாதிகளில் 10 பேரின் சடலங்கள் ஆயுதங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (மா)

## யாழ். நகரில் நேற்று நால்வர் பலி!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்று நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நால்வர் பலியானார்கள்.

ஆர். இராசேந்திரன் (30 வயது) சப்பல் வீதி யாழ்ப்பாணம். சொ. சதாசிவம் (36 வயது) புளியங்கூடல் - ஊர்காவற்றுறை. சத்தியசீலன் சத்தியமூர்த்தி (28வயது)சுருவில், ஆனந்தன் (35 வயது) கந்த (10ம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்னை
### வெளிநாட்டு சக்திகளின் குறுக்கீடு உட்பூசலை அதிகரித்துள்ளது!

(சென்னை)

இலங்கை இனப்பிரச்னையில் வெளிநாட்டு சக்திகள் குறுக்கிடுவதால் இலங்கையில் உட்பூசல் மேலும் அதிகரித்துள்ளதாக, அகிலஇந்தியக்காங்கிரஸ் ஐ கமிட்டிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

நேற்று புதுடில்லியில் அகில இந்திய காங்கிரஸ் ஐ கமிட்டிக் கூட்டம் ஆரம்பமானது.

இக்கூட்டத்தில் இந்தியப்பிரதமர் திரு. ரஜீவ் காந்தி கட்சியின் புதிய தலைவராக, காலஞ்சென்ற பிரதமர் இந்திரா காந்தியின் இடத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சர்வதேச விவகாரம் சம்பந்தமாக காங்கிரஸ் ஐ காரியக் கமிட்டி தீர்மான வாசகம் ஒன்றை இயற்றியது.

''இலங்கைத் தமிழர்களுக்கு நீதி வழங்க தேசிய ரீதியில் அரசியல் தீர்வு காணவேண்டுமென்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

## ஆஸ்பத்திரி வார்டுகளில் சோதனை

[யாழ்ப்பாணம்]

யாழ். ஆஸ்பத்திரியில் காயமடைந்த ஆண்கள் சிகிச்சை பெறும் 'வார்ட்டுகள்' நேற்று நண்பகல் சோதனையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சோதனையின்போது காயமடைந்து சிகிச்சைபெற்றுவந்த நபரொருவரை விசாரணைக்குக் கொண்டுசென்றதாக ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்தது. இதனால் நோயாளர் மத்தியில் பதட்டநிலை ஏற்பட்டதாம். (மா)

## பாதயாத்திரைக்குழு சென்னைவந்தது; துணைஸ்தானிகரிடம் மகஜர் கையளிப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்னையை உலகறியச் செய்யும் 'இராமேஸ்வரம்முதல் சென்னை வரை'யிலான பாதயாத்திரை நேற்று முன்தினம் சென்னையை வந்தடைந்தது

தமிழக சட்ட மேலவை உறுப்பினரும், உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவருமான டாக்டர் இரா. ஜனார்த்தனன் தலைமையில் இப்பாதயாத்திரை இடம்பெற்றது.

டாக்டர் இரா. ஜனார்த்தனன் சென்னையில் தமது பாதயாத்திரையை முடித்துவைக்கும் வகையில் இலங்கை துணைஸ்தானிகராலயத்துக்குச் சென்றார். அங்கே இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தனாவிடம் கையளிக்கும்படி மகஜர் ஒன்றை துணை ஸ்தானிகரிடம் அவர் கையளித்தார்.

இராமேஸ்வரம் முதல் (10-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகர் நேற்று முழு அளவில் ஸ்தம்பிதம்!
### விட்டு விட்டு சூட்டுச் சத்தங்கள்!

(யாழ்ப்பாணம்)

**யாழ். நகர் நேற்று முழுநாளும் வெறிச்சோடிக் காணப்பட்டது!**

காலையில் ஒலித்த குண்டு வெடிச்சத்தங்களும் துப்பாக்கி வெடிச்சத்தங்களும் விட்டு விட்டு நண்பகல் வரை நீடித்தது.

கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன,

ஒரு சில பஸ்கள் சேவையில் ஈடுபட்டிருந்தபோதும் அவை யாழ். நகருக்கப்பாலுள்ள சந்திகளுடன் திரும்பிவிட்டன. ஜனநடமாட்டம் மிகக்குறைவாகக் காணப்பட்டது.

நகரம் நேற்று முழுவதும் பூரணஅமைதியில் மூழ்கிக் கிடந்தது! [மா]

## பஸ்ஸுக்கு தீவைப்பு!

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்று முன்தினம் இரவு புறப்பட்ட தனியார் பஸ் ஒன்றுக்கு தீவைக்கப்பட்டதால் அந்த பஸ் முற்றாக எரிந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பஸ்ஸிலிருந்த இரு இளம் பெண்கள் உட்பட சில பிரயாணிகள் இம்சைப்படுத்தப்பட்டதுடன், அவர்களின் உடைமைகள் கொள்ளை அடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கொழும்பிலிருந்து புறப்பட்ட குறிப்பிட்ட பஸ் நான்கு நபர்களால் சிலாபத்தில் வைத்து தடுத்து நிறுத்தப்பட்டு, நான்கு மைலுக்கப்பா (10ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு சமீபமாக நல்ல தண்ணீர் கிணற்றுடன் 6½ பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. பொ. சிவபாலன், சட்டத்தரணி, சித்தன்கேணி. 31`6

நாஷனல் எயர் கொண்டிசனர் (Air Conditioner மொடல் CW—182 AS 235T —MC 17,000 BTU/H. நல்ல நிலையில் உள்ளது. ஒருவருட காலம் பாவிக்கப்பட்டது. விளம்பர இல; 3088, மே/பா 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 3088

பாவித்த தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: 86. 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 3120

சரசாலை 5சந்தியிலிருந்துபத்தூர் செல்லும் வீதியில் மாூதடி விநாயகர் ஆலயத்திற்குகிட்ட 3 பரப்புக்காணியுடன் கூடிய சகல வசதிகளுங்கொண்ட வீடு ஒன்றும் அத்துடன் வீடுகட்டக் கூடிய 5½ பரப்புக்காணி ஒன்றும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ம.சண்மு'ம், சரசாலை தெற்கு, சாவகச்சேரி. 3113

கொடிகாமம் சந்திக்கு அண்மையில். நல்ல சுற்றுடலில் வீடு கட்ட உகந்த பத்துப்பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பரதாரர், 'பொன் இல்லம், அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. 3089

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கும், கைலாசபிள்ளையார் கோவிலுக்கும் இடையில், கோவில் வீதியில் (Temple Road) 1 பரப்பு காணி வீடுகட்டக்கூடிய நல்ல சுற்றுடலில் விற்பனைக்குண்டு விரும்பியவர்கள்உடனேதொடர்புகொள்க: விளம்பர இல 3133, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3133

21/2 A, ஈச்சமோட்டை விதானையார் வீதியில் உள்ள 1½ பரப்பு காணி கிணற்றுவசதியுடன் உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் S. மகேஸ்வரி, 6/4, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம். 3064

சகல நவீன வசதிகளுடன் புதுமேல்மாடி வீடும், வளவும் நாவலர் வீதியில் விற்பனைக்குண்டு. நல்ல தண்ணீர்- பாதுகாப்பான இடம். நேரில் வரவும். 383/1 A, நாவலர் வீதி, ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். 3136

## பிரசுரம்

பிரபல்யம் வாய்ந்த ஐந்து எண் சோதிடர்களின் ஆக்கங்கள் 'தமிழ்அன்புக்குரல்'' இல் 5-5-85ல் வெளியாகின்றது. விலை ரூபா 3/- 3135

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் வை. எம். சி ஏ. இல் கண்டி வீதியை முகப்பாகக் கொண்ட, 900 சதுர அடி விஸ்தீரணமுடைய இரண்டு மாடிக்கட்டடம் குத்தகைக்கு விடப்படவுள்ளது விபரங்களை வை. எம். சி. ஏ காரியதரிசியிடம் பெற்றுக் கொள்க. 3131

## தேவை

நித்திய பூசகரும் உதவிச்காக பல வேலைகள் செய்யக் கூடிய பிராமணப் பையன்அல்லது பண்டாரமாக இருப்பவராயினும் விரும்பத்தக்கது விபரங்கட்கு தொடர்பு கொள்க: தர்மகர்த்தா, தூர்க்கை அம்மன் தேவஸ்தானம், நுணுவில் மேற்கு, சாவகச்சேரி. 3114

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

காலஞ்சென்ற கந்தரோடை சுன்னாகம் வெற்றிவேற்பிள்ளை செல்வத்துரை என்பவரின் மரணசாதனமில்லாத மரணச்சொத்து விடயமாக

-மரணமெய்தியவர்.

செல்வத்துரை சுதிர் காமஜோதி கந்தரோடை சுன்னாகம்.

-மனுதார்.

மரணசாதன
நியாயாதிக்கம்
இல. ரி/235

எதிராக

1. செல்வத்துரை சண்முகதாஸ் கந்தரோடை சுன்னாகம்
2. செல்வத்துரை செந்தில்வேல் வட்டுக்கோட்டை மேற்கு
3. செல்வத்துரை சிவசக்திவேல், கந்தரோடை சுன்னாகம்.

-எதிர்மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஆனி மாதம் 5-ந்திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றாக தாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1985-ம் ஆண்டு மாசி மாதம் 18ந் திகதி அந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்ற ஆணைப்படி
சு. வேலாயுதம
பதில் பதிவாளர்.

3015

கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்டூடியோ

## முதலமைச்சர் குடும்பம் விபத்தில் பலி

புதுடில்லி, மே 3.

பீகார் மாநில முதலமைச்சர் திரு. பிந்தேஸ்வர் துபேயின் குடும்பமொன்று விபத்தொன்றில் பரிதாபகரமாக உயிரிழந்தது.

முதலமைச்சரின் மகள், அவரது கணவர், பேரப்பிள்ளை உட்பட அவர்களின் கார்ச்சாரதி ஆகிய நால்வரும் இவ் விபத்தில் உயிரிழந்தனர்

நேற்று முன்தினமிரவு ராஞ்சி-பட்னா நெடுஞ்சாலையில் ட்ரக் வண்டியொன்றில் மோதியதாலேயே இவ்விபத்து நிகழ்ந்தது.

## நீதிமன்றம் வழமைக்குத் திரும்பியது

(மாவிட்டபுரம்)

மல்லாகம் நீதிமன்றங்களின் வேலைகள் சகஜநிலைக்கு திரும்பியுள்ளது.

மல்லாகம் நீதிமன்றத்தில் பல வாரமாக சட்டத்தரணிகள், பல வழக்காளிகள் எதிரிகள் நீதிமன்றத்தில் சமூகமளிக்காததால் நீதிமன்ற வேலைகள் சீரற்று இருந்துவந்தது. இவ்வாரம் முதல் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் சமூகமளித்ததையடுத்து வேலைகள் சகஜநிலைக்குதிரும்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## களஞ்சியத்தில் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

ஐக்கியவியாபாரச் சங்கக் களஞ்சியப்பகுதியில்இனந்தெரியாதவர்களினல் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதான வீதியிலுள்ள இக்களஞ்சியப்பகுதிக் காவலாளியைக் கட்டிவைத்துவிட்டு இக்கொள்ளையை நடத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது

இச்சம்பவம்பற்றி பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## பகிரங்க ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் வாசஸ்தலத்தில் விழுந்திருக்கும் பின்வரும் மரமும் விறகுகளும் 1985ம்ஆண்டு மேமாதம் 29 திகதி (85-05-29) மு. ப 10 30 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. மலைவேம்பு மரம் ஒன்று (பலகைகள் அறுக்கக் கூடியவை)
2. விறகுகள் (எரிப்பதற்குரியவை)

2 ஆகக்கூடியதொகையைக் கேட்கும் ஏலதாரர் உடனடியாக பணத்தைச் செலுத்துவதுடன் விற்பனை நடைபெற்ற தினத்திலிருந்து ஏழு (7) நாட்களுக்குள் மரத்தை/ விறகுகளை வளவிலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

3. மேலதிக விபரங்களுக்கு யாழ். செயலக கட்டிட மேற்பார்வையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

எஸ். இராசரத்தினம்,
நிர்வாக உத்தியோகத்தர்/
அலுவலக உதவியாளர்
யாழ்.மாவட்ட அரசாங்க
அதிபருக்காக.

செயலகம்,
யாழ்ப்பாணம்,
19-04-1985. 2979

## நுவரேலியாவில் ஆட்கடத்தல்

[கண்டி]

நுவரேலியாவில் வர்த்தகர் ஒருவரின் மகனொருவர் (வயது 26) இனந்தெரியாதவர்களால் கடத்திச்செல்லப்பட்டுள்ளார்.

இராணுவ முகாமுக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்வதாகக்கூறியே அவர் கொண்டு செல்லப்பட்டார் என்று புகாரிடப்பட்டுள்ளது.

இக்கடத்தல் குறித்து நுவரெலியப் பொலிசார் புலன் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர் [கி]

## ஜெகநாதன் இடமாற்றம்

[கொழும்பு]

சென்னையிலுள்ள இலங்கை துணை ஸ்தானிகராலயத்தில் இரண்டாவது காரியதரிசியாக இருந்த பி. ஏ. ஜெகநாதன் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

இலங்கைப் பொலிஸ் சேவையிலுள்ள இவர், கொழும்பு பொலிஸ் தலைமையகத்துக்கே மீண்டும் வந்துள்ளார். இதே வேளை சென்னையில் இவரின் பதவிக்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மஜீத் நியமிக்கப்பட்டுள்ளார். (கி)

## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை பூசையும் E. M. P.



அமரர்

### உயர்திரு. E. M. பொன்னம்பலம்

தோற்றம்: 26-6-1912 மறைவு 17-4-1985

அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென அணைந்துவிட்ட எங்களின் அன்புத்தெய்வமே நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு என்றும் நீங்காது உங்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் அன்னாரின் அந்தியேட்டிகிரியை பூசை 7-5-1985 செவ்வாய்க்கிழமை நடைபெறும் அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் எல்லோரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கோடை
காரைநகர்

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள்
3076

சங்கே முழங்கு!
யாழ் நகரில் "சங்கு மார்க்" எவர் சில்வர் பாத்திரங்களை தொழிற்சாலை விலைக்கு எமது காட்சியறையில் பெற்றுக் கொள்ளலாம்.
"இம்மாதம் 30ம் திகதிவரை சிறப்பு தள்ளுபடி உண்டு"
செல்லாசன்ஸ் சேல்ஸ் சென்ரர்
118, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 22054.

## Health Resort for Elders(Private)

## முதியோர் சௌக்கிய நிலையம் (தனியார்)

கிளிநொச்சியில்மிகவும் வசதியானதும். அமைதியானதுமான, சுற்றாடலில்தனியார்ஸ்தாபனமாக விரைவில் அமைக்கப்படவுள்ள முதியோர் சௌக்கிய நிலயத்தில் சேரவிருப்பமுள்ள சுமாரான பணவசதியுள்ள முதியோரிடமிருந்து (இருபாலாரும்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தச் சௌக்கிய நிலையத்தில் வைத்திய, நூல்நிலைய, பொழுதுபோக்கு, சமய அனுஷ்டான வசதிகள் உட்பட அனைத்து வசதிகளும் அளிக்கப்படும்

நிர்வாகத்தின் தீர்மானத்திற்கு அமையவே விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்படுவார்கள்

விண்ணப்பங்கள் அனுப்பவும், மேல் விபரங்கள் அறியவும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி;

"வைத்திய அதிகாரி"
சாந்தி வைத்தியசாலை,
கிளிநொச்சி.

3087

ஈழநாடு வாரமலர்
EELANADU VARA MALAR

# தெல்லிப்பழையூனியன் தந்த நல்லாசிரியன் 'ஐ. பி. ரி.'

உலகில் மானிடராய்ப்பிறக்கும் எல்லோருமே மக்கள் மனத்தில் அழியா இடத்தைப் பெற்றுவிடுவதில்லை. ஒரு சிலருக்கே அந்தப் பாக்கியம் கிடைக்கிறது. தங்கள் வாழ்க்கை முறை, தியாக சீலம் மக்கள் சேவை, கல்வியறிவு ஆகியவற்றின் மூலம் குறிப்பிட்ட சிலர் மக்கள் மனத்தில் நிலையான இடத்தைப்பெற்று விடுகின்றனர். இந்த வரிசையில் திரு. ஐசாக் பொன்னையா துரைரத்தினம் அவர்களும் மக்கள் மனத்தில் உன்னத இடம்பெற்றிருக்கிறார்.

இந்தக் கல்விமானை நினைக்கும்போது யாருக்கும் 'ஐ பி ரி' என்ற மூன்றுஎழுத்துக்கள் அப்படியே கண்முன்னே பளிச்சிடும்.

ஐசாக் பொன்னையா துரைரத்தினம் அவர்கள் அனைவராலும் அன்புடன் 'ஐ. பி. ரி.' என்றே அழைக்கப்பட்டு வந்தார். அந்த அன்புள்ளம் கடந்த 27-4-85 சனிக்கிழமையன்று இறைவனிடம் சங்கமித்துக் கொண்டது.

'ஆரோக்கியமான உடலில் ஆரோக்கியமான சிந்தனை இருக்கும்' என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். ஐ. பி. ரி. அவர்களைப் பொறுத்தவரையில் இந்தக்கூற்று வெகுவாகப் பொருந்தும் எனலாம்.

## யூனியனின் முதல் அதிபர்

யாழ் மாவட்டத்தில் ஒரு புதிய கல்லூரியை ஆரம்பித்த பெருமையும்ஐ. பி ரிக்கு உண்டு 1940-ம் ஆண்டில் யூனியன் கல்லூரியை ஆரம்பித்து அதன் முதல் அதிபர் பதவியையும் அவர் பொறுப்பேற்றார்.



கிறிஸ்தவ பாடசாலையாக இருந்த இதற்குக் கிறிஸ்தவ பெயர் ஒன்றைச் சூட்டினால் எதிர்காலத்தில் பிரச்சனைகள் எழக் கூடும் என்பதால், அதற்கு யூனியன் கல்லூரி என்று பெயரிட்டார் என்பதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

## மன்னிக்கும் மனப்பாங்கு

மாணவர் நலனே தன்னலன் எனக்கருதும் பண்புடையவர் ஐ.பி ரி தண்டனை என்பது மாணவனைத் திருத்துவதற்கேயன்றி அவன் வாழ்க்கையைப் பாழடையச் செய்வதற்கு அல்ல என்பது அவருடைய உயர்ந்த எண்ணம். எந்தக் குற்றம் யாரிடம் காணப்பட்டாலும் மனந்திறந்து மன்னிக்கும் மனப்பான்மை அவரிடம் நிறைந்து காணப்பட்டது.

ஆசிரியர்களானாலும் சரி மாணவர்களானாலும் சரி அனைவரின் அன்பையும் ஒத்துழைப்பையும் பெறுவதில் அவருக்கு நிகர் அவரே தான். இதன் காரணமாகவே அவர் இருபத்து நான்கு ஆண்டுகள் யூனியன் கல்லூரியின் முடி சூடா மன்னனாக விளங்கினார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மாத்திரமல்லாது அமெரிக்கா சென்று எம் ஏ பட்டத்தையும் பெற்றுக்கொண்ட கல்வி மான் இவர்.

## ஹன்டியின் நண்பர்

ஐ. பி. ரி. அவர்கள் அமரர்களான யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் செல்லையா நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா கல்விமான் ஹன்டி பேரின்பநாயகம் செனட்டர் நடேசன் ஆகியோரின் ஆப்த நண்பராக விளங்கினார்

காந்தியடிகள் இலங்கைக்கு விஜயம் செய்வதற்குக் காலாயமைந்தது. யாழ்ப்பாண வாலிப மாநாடு இந்து மாநாட்டில் ஹன்டி பேரின்பநாயகம், ஐ பி துரைரத்தினம், செல்லையா ஆகியோர் மூன்று தூண்களாக விளங்கினர்

## திருச்சபைத் தொண்டு

மதத்துறையில் திருச்சபை மட்டத்தில் அவர் தெல்லிப்பழைச் சபையின் தூணாக நின்று அரும் பெருங் காரியங்களைச் செய்திருக்கிறார்

## உயர்வு தாழ்வு அற்றவர்

சமுதாய மட்டத்திலும் அவருடைய சேவைகள் பாராட்டும் விதத்தில் இருந்தன. உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற அற்ப வித்தியாசங்களைப் பொருட்படுத்தாமல் எல்லோருடைய

[9-ம் பக்கம் பார்க்க]

### வி. குணரத்தினம்

அவருடைய திறமையும், ஆளுமையும் அனுபவமும் சகல துறைகளிலும் ஒளிவிட்டுப் பிரகாசித்தன. அவர் கல்விமானாக இருந்ததுடன் தலை சிறந்த நிர்வாகியாகவும் மிளிர்ந்தார்.

திருச்சபை ஆசானாகவும், விளையாட்டுத்துறை விற்பன்னராகவும், இரசிகராகவும் பொதுச் சேவையாளராகவும் இருந்து அவர் தமது திறமைகளை வெளிப்படுத்தினார்.

## சுந்தரின் மாணவன்

பேராசிரியர் செ சுந்தரலிங்கத்தின் மாணவராக இருந்த பெருமை ஐ. பி. ரிக்கு உண்டு. இலங்கை பல்கலைக்கழகத்திலிருந்து கணிதப் பட்டதாரியாக வெளியேறிய ஐ.பி. ரி. தமது பழைய கல்லூரியாகிய யாழ்ப்பாணக் கல்லூரியில் உதவியாசிரியராகப் பணிபுரிந்தார். அவர் தமது காலத்தில் கல்லூரியில் விளையாட்டுத் துறையிலும் தீவிர அக்கறை செலுத்தி மாணவர்களை விளையாட்டு வீரர்களாகவும் உருவாக்கினார்.

# இலட்சியவாதிக்கு எழுபது



இடதுசாரிகள் மதிப்பாகவாழும் ஒரு உலகசமுதாயத்தில் நாம்வாழ வழி பிறந்திருக்கிறது.

விதியிலும் கர்மாவிலும் ஆறுதல் காணும் மனப்பான்மை இன்று அருகி வருகிறது. விஞ்ஞான ரீதியில் அணுகிக் காரண காரியங்களை ஆராய்ந்து தீர்வு காணும் பயிற்சி விருத்தியடைகிறது 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உருவான சோஷலிச மனோபாவம் உலகத்தை உருட்டிவிட்டது.

இங்கிலாந்தில் இது பல சிந்தனைச் செம்மல்களைக் கொள்ளை கொண்டது வறுமையைப் போக்குவதற்கும் மனிதசமத்துவத்தை நிலைநிறுத்துவதற்கும் பொதுஉடைமைச் சித்தாந்தமே புதிய மார்க்கமாகக் காணப்பட்டது.

லண்டன் பீ. எஸ் ஸி (சிறப்பு) கணிதத் துறையில் முதலாம் வகுப்பில் பட்டம் பெற்று அரசாங்க புலமைப்பரிசு பெற்று கேம்பிறிட்ஜின் கணிதத்துறையில் மிக உயர்ந்த பட்டம் (Wrangler) பட்டத்தைப் பெற்ற திரு. அ. வைத்தியலிங்கம் தமது வருங்காலத்தை சமத்துவ சமுதாயத்தை இலங்கையில் கட்டி எழுப்பும் பணிக்கு தியாகஞ்செய்தார் இத்தகைய மாமனிதர் நம் நாட்டில் விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள்.

புகழ் நிறைந்த குடும்பத்தில் பிறந்து கல்வியில் உலகளாவிய முறையில் சிறந்து மனிதவிடுதலைக்கெனத் தன் வாழ்வை அர்ப்பணித்த இப்பெரியார் இன்று எழுபதாவது வயதையடைந்தசெய்தி நாட்டுக்கும் எமது மக்களுக்கும் பெருமகிழ்ச்சி.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை 1943ல் நிறுவிய ஸ்தாபகர்களில் இவர் முக்கியமானவர். இலங்கை முழுவதிலும் கம்மியூனிஸ்ட் இலட்சியத்தை விளக்கி வைத்த சிந்தனைச் சிற்பி வைத்தியலிங்கம்.

பழமை பேணுவதில் முன்னிற்கும் யாழ்ப்பாணத்தில் பழமைக்குப்பழமையாகவும் புதுமைக்கும் அப் பெற்றிய தாய் ஆற்றிய பணி இன்று மூளாத்தீபோல் இருக்கின்றது.

பாராளுமன்றமும் நகரசபையும் இந்த அரசியல் மேதையின் சிறந்த சேவையைப் பெற முடியவில்லை. இருப்பினும் இலட்சியவாதியாய், தொழிற்சங்கத் தலைவனாய், சிறந்த ஆசிரியனாய், அதிபராய் அவர் இயற்றிய சாதனைகள்; அவரைப்போல மிக அமைதியானவை.

சிந்திக்கும் திறமை, சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் ஆற்றலுடன் நேர்மை, தூய்மை, எளிமை என்னும் மூன்று அரிய 'மை'களின் இருப்பிடமாக, மனிதனை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடைய வகுத்த மார்க்சிசம்-லெனினிசம் என்ற முற்போக்கில் மேலும் பல்லாண்டு பணிபுரிய ஆண்டவன் அருள்புரிவாராக.

# மக்கள் சமாதானத்தை விரும்புகின்றனர் ஆனால்....

உலகின் இரு பெரும் வல்லரசுகளாகத்திகழ்கின்றஅமெரிக்கா, சோவியத் ரஷ்யா போன்ற நாடுகளின் ஆட்சிபீடங்கள் மத்தியிலே அரசியல் விஞ்ஞான, அணுவாயுத ஆதிக்கப் போட்டிகள் நிலவி வருகின்ற இக் கால கட்டத்தில், இவ் விரு நாடுகளிலும் சமாதானத்தை விரும்புகின்ற, நேசிக்கின்ற, பிரஜைகள் தமக்குள் நட்புறவையும் நல்லெண்ணத்தையும் வளர்த்துக் கொண்டு, சமாதானமாக வாழவேண்டும் என்ற எண்ணங் கொண்டு செயல்பட்டு வருகின்றனர்.

அமெரிக்காவில் வாழ்கின்ற மொத்த ஜனத் தொகையில் சுமார் 82-வீதமான மக்கள் ரஷ்ய மக்களுடன் நட்புறவுடன் வாழ விரும்புவதாக அண்மைக்காலப் புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கின்றது.

இங்குள்ள, சமாதான இயக்கங்கள், அமெரிக்க மக்களைக் கோஷ்டி கோஷ்டியாக சோவியத் ரஷ்யாவுக்குச் சுற்றுப் பயணமாக அழைத்துச் சென்று, அங்குள்ள சமாதான சபைகளினதும், தேவாலய சபைகளினதும் ஆதரவுடன், அன்பையும் நட்புறவையும் மக்கள் மத்தியில் பெருக்கி வருகின்றன

இவ்வாறு சோவியத் ரஷ்யாவுக்குச் செல்கின்ற சமாதான சுற்றுப்பயணக் குழுக்கள் அமெரிக்காவிலுள்ளசாதாரண பிரஜைகள், தொழிலாளர்கள் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் சமாதான, அன்புச் செய்திகளை எடுத்துச் சென்று ரஷ்ய மக்களுக்கு வழங்கி வருகின்றன

அதேவேளை, அமெரிக்கர்கள் மத்தியிலே, ரஷ்ய மக்கள் பற்றிய நல்ல அபிப்பிராயங்களை மேலும் வளர்க்கும் பொருட்டுப் பல்வேறு விதமான நூல்கள், சிறு பிரசுரங்கள், படங்கள் என்பவற்றினை இவ் இயக்கங்கள் வெளியிட்டு வருவதுடன் 'ரஷ்ய மக்கள் என்ன சொல்கின்றனர்' எனும் தலைப்புக்களில் சொற்பொழிவு நிகழ்ச்சிகளையும் அடிக்கடி ஏற்பாடு செய்து. அமெரிக்க மக்கள் மத்தியிலே ரஷ்யமக்களைப் பற்றி நல்ல அபிப்பிராயங்களை உருவாக்கி வருகின்றன.

தற்போது, அமெரிக்காவிலுள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் தனியார் கல்விக் கூடங்களில் ரஷ்ய மொழியும் போதிக்கப் பட்டு வருகின்றது.

### க. ஜீவகதாஸ்

"நாம் போருக்கு எதிரானவர்கள், நாம் எமக்குள்ளே அன்பாகவும் சமாதானமாகவும் இருப்போம் அரசாங்கங்களின் ஆதிக்க வெறியை நாம் அன்பான வழியில் சமாதானமாக மாற்ற முயற்சிப்போம்" என்ற எண்ணப் பாங்குடன் அவர்கள் பணிபுரிகின்றனர்.

சோவியத் ரஷ்யாவிலுள்ள சமாதான சபைகளும்அடிக்கடி அமெரிக்காவுக்கு விஜயம் செய்து, சாதாரண மக்கள் மத்தியிலே நல்லெண்ணத்தையும் நட்புறவையும் வளர்த்து வருகின்றன

இரு நாடுகளிலும் இருக்

(9-ம் பக்கம் பார்க்க)

## எமது சிறுகதை

இது ஒரு சிறப்புக்கதை

# புதிய பாதையிலே....

வை. சிவநேசன்

இலங்கை வானொலியில் 'பொங்கும் பூம்புனல்' ஆரம்பமாவதற்கான இசை அயல் வீடொன்றிலிருந்து கரகரப்புடன் ஒலித்தது. அப்பொழுது தான் முகத்தை மூடியிருந்த போர்வையை விலக்கியவாறே கண்விழித்த குமரேசன், கைகளை நீட்டிமடக்கிச் சோம்பலை போக்கிக்கொண்டான். வீட்டின் ஓலைக்கூரையில் இருந்த துவாரமொன்றினூடாக சூரியக்கதிர்கள் அவனது முகத்திற்கு நேரே ஒளிவீசிக் கண்களைக் கூசச்செய்தன.

ஏழுமணியாகிவிட்டதை உணர்ந்த குமரேசன் எழுந்திருக்கமனமின்றியே படுக்கையிலிருந்து எழுந்து கட்டிலில் உட்கார்ந்தான். அருகிலே தாயார் வைத்துச் சென்ற தேநீர் சூடெல்லாம் ஆறிப் போய்ச் சில்லெனக் குளிர்ந்து விட்டிருந்தது. தேநீரை எடுத்து உறிஞ்சிப் பருகியபடியே தனது வாழ்க்கையில் கடந்த ஓரிரு மாதங்களுள் நடந்த சம்பவங்களை இரைமீட்கலானான்.

ஐந்து வருடங்களுக்கு முன்பே குமரேசனின் தந்தை கதிர்காமர், தாயையும் மூன்று சகோதரங்களையும் காப்பாற்றும் பொறுப்பை இவனது தலையில் சுமத்திவிட்டு விபத்தொன்றில் அகப்பட்டு உலக வாழ்க்கையிலிருந்தே ஓய்வுபெற்றுக் கொண்டார். அவர் விட்டுச் சென்றது, மூத்தசகோதரி கமலத்தின் திருமணத்திற்காக வங்கியில் சேர்த்து வைத்திருந்த முப்பதினாயிரம் ரூபா காசும் பத்துப்பரப்பு வயற்காணியுந்தான். குத்தகைக்காக வயற்காணியை ஒருசிலர் கேட்டபோதிலும் கதிர்காமர் அதனைகொடுக்கவிரும்பவில்லை.

தந்தை இறந்தபோதுகுமரேசனுக்குப்பத்தொன்பது அல்லது இருபது வயதிருக்கலாம். 'அட்வான்ஸ் லெவ'லில் படித்துக்கொண்டிருந்தான். அதனை இடையில் நிறுத்திவிட்டு ஜி. ஸி. ஈ. பெறுபேறுகளைக்கொண்டு தனியார் தொழிற்சாலையொன்றில் கிளார்க் வேலை ஒன்றைப் பெற்றுக் கொண்டான். மாதம் சுமார் எழுநூறு ரூபா சம்பளம் கிடைக்கும். அந்த வேலையின் மூலமாக ஒருவாறு குமரேசனும் குடும்பத்தைக் கொண்டு செல்லமுடிந்தது.

மூன்று வருடங்களாக எந்தச் சிக்கலுமின்றி ஓடிய அவனது வாழ்வில் கடந்த இரண்டு மூன்று மாதங்களாகத்தான் புயல்வீச ஆரம்பித்தது. 'சுமார் நூற்றைம்பது பேர் வரையிற் தொழில் செய்யும்குமரேசனின் தொழிற்சாலையின் நிர்வாகம் திடீரென தொழிற்சாலை நட்டத்தில் இயங்குகிறது எனக் காரணங்காட்டி எல்லாத் தொழிலாளர்களதும் சம்பளத்திலிருந்து நூறு, நூற்றைம்பது ரூபா குறைத்தது. ஆனால் உண்மையில் தொழிற்சாலை நட்டமடையவில்லை என்பது எல்லாத் தொழிலாளர்களுக்கும் நன்கு தெரிந்திருந்தது. தமது சொகுசு வாழ்க்கைக்கு மேலும் மெருகேற்றுவதற்காக அப்பாவித் தொழிலாளர்களின் வயிற்றிலடிக்கும் செயலைக் கண்டு எல்லாத் தொழிலாளர்களதும் நெஞ்சம் குமுறியது.

குமரேசனால் இந்த அநியாயத்தைப் பார்த்துப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. தொழிலாளர் குடும்பங்களை நடுத்தெருவில் நிற்க வைக்கும் இந்தத்திட்டமிட்ட வஞ்சகச் செயலை எதிர்த்துப்போராட வேண்டுமென அவனது மனம் ஓலமிட்டது. அதன் விளைவாக அவனே முன்னின்று எல்லாத் தொழிலாளர்களையும் ஒன்றுதிரட்டி வேலைநிறுத்தம் ஒன்றிற்கு ஒழுங்கு செய்தான். தொழிற்சாலையைச் சுற்றித் தொழிலாளரால் மறியற் போராட்டமும் நடத்தப்பட்டது. இரண்டுவார காலமாக போராட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இருவாரங்களின் பின்னர் தொழிற்சாலை நிர்வாகம் பணத்தின் மூலம் சதுரங்கமாடியது. அவர்கள் வீசிய ஐம்பது நூறுகளுக்கடிமையாகி தொழிலாளர்—காய்கள் எல்லாம் தாமாகவே நகர்ந்தன. போராட்டத்தை வலுவிழக்கச் செய்வதில் நிர்வாகம் வெற்றி பெற்றது. ஓரிருவரைத் தவிர ஏனைய தொழிலாளர்கள் வேலைக்குச் செல்ல ஆரம்பித்தனர். குமரேசன் எல்லாத் தொழிலாளர்களையும் ஒன்று கூட்டி, ''ஒன்று பட்டுச் செயற்பட்டால் நிச்சயமாக வெற்றி பெறலாம்'' என்று எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவனது முயற்சி பலனளிக்கவில்லை.

அவர்கள் கூறிய பதில் அவனைத் திகைக்க வைத்தது. ''ஏனப்பா' உனக்கு வேலைக்கு வர விருப்பமில்லாட்டிவிட்டிலை நிற்கவேண்டியதுதானே! அதுக்காக ஏன் எங்கட வயித்திலையும் அடிக்கிறாய்? எங்களையும் உன்னோடை நடுத்தெருவில் நிற்கச் சொல்லுறியே? நாங்கள் வேலைக்குப் போகாமல் விட்டு எங்களின் வேலை போட்டுதெண்டால் நீ எங்களின்ர குடும்பங்களுக்குச் சாப்பாடு போடுவியா?'' அவர்களின் கேள்விக் கணைகள் குமரேசனின் நெஞ்சத்தைத் துளைத்து புண்ணாக்கின.

ஒரு ஐம்பது, நூறு ரூபா பணம் இவ்வளவு தூரம் அவர்களைப்பேசவைக்குமென அவன் எதிர்பார்க்கவில்லை. இறுதியில் குமரேசனின் வேலை தான் பறிபோனது. அவனுக்கு நினைக்கவே மனம் புகைந்தது.

அவன் நெஞ்சம் அழுதுவடிந்தது.

''என்னடா மோனே, தேத்தண்ணிளைக்கையிலை வைச்சுக்கொண்டு ஏதோ கடுமையாய் யோசிக்கிறாய். வேலை போன நாளிலை இருந்து இப்படித்தான் படுக்கையாலை எழும்பின கையோட விசர் பிடிச்சவன் போல யோசிக்கிறாய்! சும்மா போராட்டம், மண்ணாங்கட்டி எண்டு இருந்த வேலையையும் போட்டடிச்சுப் போட்டு ...?'' - தாயின் குரல் அவனின் நினைவலைகளுக்குத் தடைபோட்டது.

''தம்பி! நீ முதலாளியிட்டப் போய் காலிலை பிடிச்செண்டாலும் திரும்பவும் வேலையிலே சேரப்பாரன்'' - தாய்தன்பாட்டிற்குக் கூறிக்கொண்டே போனாள். தாயின் கதையைக்கேட்க அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. எனினும் அமைதியாகவே இருந்தான்.

''என்ன தம்பி, நான் விசரி போல ஏதோ அலட்டுறன் நீ நீ உன்பாட்டிலை ஏதோ யோசிச்சுக்கொண்டிருக்கிறாய்!''

''என்னணையம்மா! நீ விசர்க்கதையெல்லே கதைக்கிறாய் என்னை மானம் மரியாதை இல்லாதவனெண்டே நினைச்சாய். வேலையிலை இருந்து விலக்கின பிறகும் அவங்களிட்டைப் போய்க்கெஞ்சிக் கொண்டு நிக்கவா?'' - குமரேசன் சீறிவிழுந்தான்.

''இன்னும் கொஞ்ச நாளைக்கு நீ இப்படியே வேலையில்லாமல் இருந்தாய் எண்டால் நாங்கள் மான மரியாதையெல்லாத்தையும் காத்திலை பறக்கவிட்டுப் பிச்சைதான் எடுக்க வேண்டி வரும்'' - தாய் மீனாட்சி மெதுவாகப் புறுபுறுத்தவாறே குசினிக்குள் சென்றாள்.

குமரேசனுக்கு விசர் பிடித்து விடும்போல இருந்தது. கடந்த ஓரிரு மாதங்களாகவே பெரும்பாலும் கடனிலேயே குடும்பம் ஓடிக்கொண்டிருக்கிறது. அவனது மூத்த சகோதரி கமலத்திற்கும் இப்போது வயது முப்பதைத் தொட்டிருந்தது. இன்னும் திருமணம் ஆகாமலே இருந்தாள். ஒருசில இடங்களில் முயற்சி செய்தும் கூடப் பயனேதும் ஏற்படவில்லை. நினைவலைகளுக்கு அணைபோட்டுவிட்டு எழும்பி கையிலேயிருந்த தேநீர்க் கோப்பையை மேசையிலே வைத்துவிட்டுக் குமரேசன் அடுப்புக்குள்ளிருந்து கரித்துண்டொன்றை எடுத்தவாறே பல்லுத் துலக்குவதற்காக முற்றத்திற்கு வந்தான்.

வேறு ஒரு வேலையைப் பெற்றுவிடக் குமரேசன் பல இடங்களிலும் முயற்சி செய்த போதிலும் பயனெதுவும் கிட்டவில்லை.

இப்பொழுதுகூட வேலை விஷயமாகவே தன்னுடன் ஒன்றாகப் படித்த செல்வம் என்ற நண்பனின் வீட்டிற்குச் செல்வதற்காக சைக்கிளிற் புறப்பட்டான், வழியிலேயே செல்வத்தைச் சந்தித்தான். அவன் தற்போது ஒரு பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றி வருகிறான். நீண்ட நாளைக்குப் பிறகு சந்தித்ததாலே என்னவோ சற்று நேரத்தின் பின்னர் தான் செல்வம் குமரேசனை இனங்கண்டான் 'ஓ, என்ன மச்சான் குமரேசன் கனநாளைக்குப் பிறகு இந்தப் பக்கம் காத்தடிச்சிருக்கு என்ன விஷயம்?'' - செல்வம் தான் கேட்டான் குமரேசன் எல்லா விபரங்களையும் ஆதியோடந்தமாக அவனுக்கு எடுத்துக் கூறினான்.

''நீ மடைவேலை செய்திட்டாய் மச்சான் எல்லாரும் அவனவன் தன்பாட்டிற்கு வேலைக்குப்போக நீ மட்டும் போராட்டம், மறியல் எண்டு தொடங்கி வேலையையும் பறிகொடுத்திட்டு நிற்கிறாய்'' - செல்வம் பொரிந்தான்.

''இல்லை, செல்வம் நீ சொல்லுறதை என்னாலை ஏற்றுக்கொள்ள முடியாது அக்கிரமத்தை அடக்குமுறையை எதிர்த்துப் போராடுவது தவறா? நியாயத்துக்காக குரல் கொடுப்பது தவறு தொழிலாளர்களுக்குத் தமது உரிமைகளுக்காகவோ, சலுகைகளுக்காகவோ நியாயமான முறையில் போராட உரிமையில்லையா? நீ எதைப் பிழை எண்டு சொல்லுறாய்?''

''நீ சொல்லுறது சரி. ஆனால் அந்தப் போராட்டம் ஒற்றுமையாக ஒரணியில் நின்று நடத்தப்பட்டதா? இல்லை. நீ மட்டுந்தான் அதற்குப் பலிக்கடாவாக்கப்பட்டிருக்கிறாய் அதாலை உன்னையே நம்பியிருந்த குடும்பம் இண்டைக்கு அல்லற்படுகிறது.''

''அதுதான் செல்வம் இப்ப நான் உன்னட்ட வந்ததே இந்த வேலை விஷயமாய்த்தான். உனக்குத் தெரிந்த இடத்தில் எங்கையெண்டாலும் ஒரு சின்ன வேலை எண்டாலும் எடுக்கலாமெண்டால் ''

''என்னடாப்பா, குமரேசன், நீயே விஷயம் தெரியாதவன் போலக் கதைக்கிறாய். இப்ப நம்ம நாட்டில் ஒரு வேலை எடுக்கிறதெண்டாலும் அது நடக்கிறகாரியமே?''

''அப்ப, நான் என்னதான் செய்யலாமெண்ணுறாய்?''

''பேசாமல் வெளியிலை எங்கையாலும் போகப்பார் மச்சான். ஒரு வருஷம் சும்மா இருந்தாலும் பிறகு வட்டியோட உழைச்சிடலாம். இஞ்சை இருந்து என்ன செய்யிறது.''

இன்றைய சராசரி தமிழ் இளைஞர்கள் கூறுவதையே செல்வமும் கூறினான்.

''வெளிநாட்டுக் கெங்கையாலும் போறதெண்டாலும் அக்கான்ர கல்யாணத்திற்கெண்டு இருக்கிறதிலை தான் கைவைக்கவேணும் அப்பிடிப் போய் அங்கை வேலை இல்லாமல் இருந்திட்ட பிறகு இஞ்சை என்ன செய்யிறது. அதுவுமில்லாமல் இப்ப ஏஜென்சிக்காரன்களும் ஏமாத்திப்போட்டான்கள் எண்டால் பிறகு உலக்கை தேய்ஞ்சு உளிப்பிடியான கதையாய்த்தான் முடியும்'' குமரேசன் தீவிரமாகச் சிந்தித்தபடியே சொன்னான்.

''இப்படி ஒவ்வொண்டையும் யோசிச்சு மண்டையைப் போட்டு உடைச்சுக்கொண்டிருந்தால் ஒண்டும் முடியாது மச்சான், இப்ப ஆயிரக்கணக்கிலை பொடியள் போய்க் கொண்டுதானே இருக்கிறான்கள். எதுக்கும் நான் வீட்டை போய் யோசிச்சுப் பார்க்கிறன்'' எனக்கூறிவிட்டுக் குமரேசன் விடைபெற்றுச் சென்றான்.

அடுத்த ஓரிரு நாட்களுக்குக் குமரேசன் இதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். இருக்கின்ற கொஞ்சநஞ்சப் பணத்தையும் எடுத்துக் கொண்டு வெளிநாடு செல்ல அவன் விரும்பவில்லை 'வேலையில்லாதவர்களுக்கெல்லாம் ஒரே வழி வெளிநாடு செல்வது தானா? எல்லோரும் போகின்ற வழியில்தான் நானும் செல்லவேண்டுமா? ஏன் நான் வேறு வழியிற் செயற்படக்கூடாது?' பலமான சிந்தனையின் பின்னர் அவன் தீர்க்கமான தொரு முடிவுக்கு வந்தான். தமக்குள்ள வயற்காணியில் பயிர் செய்து அதன் மூலம் தன் குடும்பத்திற்கு ஒளியேற்ற முனைந்தான் அவன். பேனை பிடித்த கையினால் ஏரைப் பிடிக்கத்தீர்மானித்தான். பைல்கட்டுகளைத் தூக்கிய கரங்களில் பயிர்க்கட்டுகளைத் தூக்கத்தீர்மானித்

(10-ம் பக்கம் பார்க்க)

## இவ்வாரம் உங்கள் பலன்

### இன்று

மாதம்- சித்திரை
திகதி - 23 [1985-5-5]
வாரம்: ஞாயிறு
திதி - பிரதமைபின்னிரவு வரை
நக்ஷத்திரம் -விசாகம்முன்னிரவு வரை

**மேடம்**
இவ்வாரம் அதிக பேச்சைத் தவிர்க்கவும் வஞ்சகர் உறவினால் சஞ்சலப்பட நேரும். பிரயாணத்தின் போது பொருள் தவறக் கூடும். போக்கு வரத்தில் நிதானம் வேண்டும்.

**இடபம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கூட இருந்தவர்களே குழிதோண்டப் பார்ப்பர் அதிக நம்பிக்கை வைப்பதால் ஆபத்துக்கள் உருவாகும் இவ்வாரம் அவதானம் வேண்டும்.

**மிதுனம்**
பேச்சில் நிதானம் வேண்டும் உள் வீட்டிலேயே பூசல்கள் தோன்றலாம். இவ்வாரம் விழிப்புடன் இருக்கவும்.

**கடகம்**
தக்க சமயத்தில் பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும். இவ்வாரம் தெய்வ வழிபாட்டுடன் புண்ணிய காரியங்களில் ஈடுபடல் நன்று.

**சிங்கம்**
எக்கருமம் செய்வதாயினும் இவ்வாரம் எச்சரிக்கை வேண்டும். தொழில் விடயத்தில் மறைமுக சதித்திட்டங்கள் உருவாகும் முதலாளிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**கன்னி**
வணிகர்கள் இவ்வாரம் அவதானம் வேண்டும். அதிக முதலீடு செய்வதைத் தவிர்க்கவும். நீதித்துறையோடு சம்பந்தப்பட்டவர்கள் நிதானம் வேண்டும்.

**துலாம்**
ஆத்திரப்படுவதால் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரும். திடீர் சந்திப்பின் மூலம் பயனுள்ள விடயம் ஒன்று நடைபெறும். அமைதியைப் பேணவும்.

**விருச்சிகம்**
விரக்தியைத் தவிர்க்கவும். கடந்தகால சம்பவமொன்றையிட்டு கவலைப்பட நேரும். இவ்வாரம் மன உறுதியுடன் நாளைக் கடத்தவும்.

**தனுசு**
கொடுத்த வாக்கைக்காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். எதிர்பாராத வரவிற்கும் இடமுண்டு. பேச்சில் நிதானம் வேண்டும்.

**மகரம்**
சகோதரவழியால் திடீர் செய்திக்கு இடமுண்டு. வெளியிடத்துத் தொடர்புகள் பெருகும். முயற்சிக்கும் விடயம் வேதனை தரலாம். அமைதி வேண்டும்.

**கும்பம்**
தாய்வழிச்சுகக்குறைவுண்டு. திடீர் சுகவீனத்திற்கும் இடமுண்டு உணவு விடயத்தில் அவதானம் வேண்டும். வரவிலும் சோர்வு தென்படும்.


**மீனம்**
புத்திர வழியால் கவலைக்கு இடமுண்டு. செய்தொழிலில் சிரமம் தோன்றும், எவராயினும் நம்பிநடக்க வேண்டாம்

திருமலை க. வே. ரவீந்திரன்

## தொடர் நவீனம்

# பரம்பரை அகதிகள்

— தெணியான்



7

க ந்தசாமி, சின்னக்குஞ்சியின் வீட்டுக்கே குடும்பத்துடன் குடி பெயர்ந்து போய்விடுவதென்று தீர்மானித்துக் கொண்ட போதும் அங்கு செல்வதற்கு முன்னர் அவளிடம்பேசி அதற்கான சம்மதத்தை பெற்றுவிட வேண்டுமென்று எண்ணினான்.

மறுநாட் காலையில் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற அவன், சின்னக்குஞ்சியிடம் இன்று இதுபற்றிப்பேசவேண்டுமென்று நினைத்துக் கொண்டே போனான்.

கதிகால்களும் அந்தக் குடிசைகளில் வாழும் மக்களைப் போல, செம்மண் புழுதிபடிந்து பரட்டை பற்றி சோகை பிடித்துத் தோன்றுகின்றன.

அங்கு போய், புதிதாக ஒரு பகுதியில் குடிசை ஒன்றைப் போட்டுக்கொண்டு கந்தசாமி குடும்பத்துடன் குடியேறிவாழலாம் என்றால் அதற்குமங்கு இடமில்லை. அந்தக் குடிசைகளுக்கு இடையில் ஒரு வேப்ப மரமும் அந்த வேப்ப மரத்தின் அடியில் அந்தப் பகுதி மக்களின் வழிபடு தெய்வமான காளியும், அதற்கு முன்புறமாக சிறியதொரு நிலப்பரப்பும் இருக்கிறது.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் அந்தச் சிறிய நிலப்பரப்பில் கந்தசாமியும் அவன் வயதொத்த இளைஞர்கள் சிலரும் சேர்ந்து தமக்கென்றொரு வாசக நிலத்தை வாங்கிறதென்டா..!"

"ஏன் வாங்கவேணும்?" என்று திருப்பிக் கேட்டான் அவன்.

வாங்காமல் எப்பிடி நிலம் எங்களுக்கு வரும்!"

"சந்ததி சந்ததியாக நாங்கள் குடியிருக்கிறம். அதனாலை எங்களுக்குத்தான் சொந்தம்."

"வாய்ச்சொல்லுப் போதுமே! அதுக்கென்னஆதாரம்?"

"நாங்கள் தானே இருக்கிறம்"

"அவங்களிட்டை உறுதி கிடக்குது".

"எங்களிட்டையும் மனத்திலை உறுதி இருந்தால் அவையள் எங்களை ஒண்டும் செய்யேலாது".

கந்தசாமியின் கருத்தை இளைஞர்கள் சிலர் உறுதியாக ஆதரித்தனர் ஆனால் முதியவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அவர்களைத் தட்டி அடக்கி, நிலத்துக்குரிய பணத்தைக் கொடுத்துச் சொந்தமாகவே வாங்கி விடுமோமென்று சமாதானம் பண்ணி வைத்தார்கள்.

இன்றுவரை அவர்கள் தமக்குச் சொந்தமில்லாத நிலங்களில் தான் அடங்கி ஒடுங்கி அஞ்சியஞ்சி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சின்னக்குஞ்சி, தன் விருப்பத்திற்கு மாறாக எதுவும் சொல்ல மாட்டாளென்றே அவன் திடமாக நம்பினான். ஆனால் சின்னக்குஞ்சியின் அந்த சிறிய குடிசை அவளுக்கும் அவளுடைய குழந்தைகளுக்குமே இன்று அவர்கள் வாழுவதற்குப் போதுமானதாக இல்லை. இந்த நிலையில் தன் குடும்பமும் இணைந்து கொண்டால் எப்படி அங்கே வாழ முடியுமென்பது தான் அவன் முன் பூதாகரமாகத் தோன்றிய ஒரு பிரச்னை.

அவர்கள் குடியிருக்கும் அந்த இடமே நெருக்கடியான ஒரு பகுதிதான். பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில், பருத்தித்துறையிலிருந்து இரண்டு மைல்களுக்குஅப்பால் வீதிக்கு வலது புறமாகப் பார்வையைச் செலுத்திக்கொண்டு சென்றால் மந்திகை சந்திக்கு அண்மையில் வீதியிலிருந்துசில மீற்றர் தூரம் உள்ளே தள்ளிப் பன்றிக் குட்டிகள் போலத் தாழ்ந்து நெருக்கமாகத் தோன்றும் குடிசைகள் நிறைந்து கிடக்கும் இடந்தான் அந்தப் பகுதி. யாழ்ப்பாணச் சமுதாயத்தின் முன்னு வேலிக் கலாசாரத்தின் சின்னமாக விளங்கும் வேலிக் கதிகால்கள் அங்கு நெருக்கமாகக் கிடக்கும் குடிசைகளை எல்லை பிரித்துக் கொண்டு நிற்கின்றன. அந்தக் சாலையை அமைக்கத் தீர்மானித்தார்கள். சிறிய ஒரு ஓலைக் கொட்டிலை அதிற்போட்டு, அதற்குப் 'பாரதி படிப்பகம்' என்று பெயரும் சூட்டினார்கள்.

அவர்கள் வாசகசாலை ஆரம்பித்த அடுத்தநாட் பிற்பகல், தங்கள் கூலிவேலைகளை முடித்துக்கொண்டு அங்கு வந்து பார்த்தபோது, வாசகசாலை எரிந்து சாம்பலாகிக்கிடந்தது.

அவர்கள் குடியிருக்கும் அந்தப் பகுதி நிலங்களுக்குச் சொந்தக்காரனானவன் அங்கே வந்து அந்தவாசகசாலைக்கொட்டிலுக்குத் தீமூட்டியதோடு, ஒரு ஆட்டுக்கொட்டில் கூட இனிமேல் யாரும் புதிதாக அந்த நிலத்திற் போடக்கூடாதென்று எச்சரிக்கை செய்து கொண்டு போனதாக அவர்கள் அறிந்தார்கள்.

கந்தசாமி இந்தக் கொடுமையைக் கண்டு அன்று துடித்தான். அவனைச் சமாதானம் பண்ணிக் கட்டுப்படுத்திவைப்பதற்குச் சின்னக்குஞ்சி அன்று பெருஞ்சிரமப்பட்டுப் போனாள்.

கந்தசாமி அன்றே மனக் கொதிப்புடன் சொன்னான்.

"நாங்கள் இந்த நிலங்களைச் சொந்தமாக்கவேணும்,".

"வயித்துப் பாட்டுக்கே எங்கடை உழைப்பும் போதாது-

சின்னக்குஞ்சியின் வளவெல்லைக்குள் புதிய ஒரு குடிசையைப் போட்டுக்கொண்டே வாழவேண்டி இருக்குமென்று கந்தசாமி மனத்தில் தீர்மானித்துக்கொண்டான்.

நிலத்துக்குரியவன் அதற்கும் சம்மதிக்கமாட்டானே என்ற சந்தேகம் அவன் மனத்தில் வேறு எழுந்தது.

நிலத்தைச் சொந்தமாக வாங்கிக்கொள்ளும்படி அவர்களுக்கு அண்மைக் காலமாகத் தொல்லைகொடுத்துக்கொண்டு இருக்கும் நிலச்சொந்தக்காரன் அப்படி வாங்காது விட்டால் எல்லோரையும் குடியெழுப்பிவிட்டு வேறு யாருக்காவது விற்றுவிடப் போவதாகப் பயமுறுத்திக் கொண்டிருப்பதும் அவனுக்குத் தெரியும்.

எல்லாவற்றுக்கும் முதல் சின்னக்குஞ்சியோடு பேசுவோமென்று நினைத்துக்கொண்ட கந்தசாமி தன்னுடைய நிலைமையை அவளுக்கெடுத்துச் சொன்னான்.

அவன் விபரமாகச் சொல்லும் வரையும் யாவையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் சின்னக்குஞ்சி. அவன் சொல்லிமுடித்த பிறகு இறுதியாக "உனக்கிஞ்சை இருக்கச்சரிவராது" என்று மட்டும். சுருக்கமாகச் சொன்னாள்.

அவனுக்குத் தன் காதுகளையே நம்பமுடியவில்லை

சின்னக்குஞ்சி இப்படி எடுத்தெறிந்து பதில் சொல்லுவாள் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை,

சிறிது நேரம் அவள் முகத்தையே ஏக்கத்துடன் அவன் பார்த்துக் கொண்டிருந்தான். பின்னர் தன் மனத்திலெழுந்த குழப்பத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு தளதளத்த குரலில் மெல்லக்கேட்டான்.

"ஏனக்கா அப்படிச்சொல்லுறாய்!"

"எல்லாரும் என்னெண்டு இஞ்சை இருக்கிறது. வசதி இருக்கே! அதுதான் சொல்லுறன்"

"அப்ப நாங்கள் எங்கை அக்கா போறது?" கேட்கும் போதே அவன் அழுதுவிடுவான் போலத்தோன்றுகிறது.

அவன் இப்படிக் கேட்ட போது அவள் தன் மனத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் அழுதே விட்டாள். ஆனால் தன் தீர்மானத்தை மாற்றிக் கொள்ளவில்லை. அவனை நினைத்துக்கண்ணீர் விட்டு அழுது கொண்டே மீண்டும் சொன்னாள்,

"நீங்கள் எங்கையும் போயிருங்கோ, ஆனால இஞ்சை இருக்கவேண்டாம் நான் இருக்கவிடமாட்டேன்"

அவன் அதன் பிறகு அவளோடு வாய் திறந்து ஒன்றும் பேசிக்கொள்ள விரும்பவில்லை. தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு அங்கிருந்து மெல்லக் கிளம்பினான்.

சின்னக்குஞ்சி தெரிவித்த மறுப்பு வேதனைப்படுத்தி அவளைத் துன்புறுத்திய போதும் அவள் உண்மையான உள்ளத்துடன் அப்படிச் சொல்லவில்லை என்றே அவன் மனத்தில் தோன்றியது. அவள் எதை மனத்தில் வைத்துக் கொண்டு அப்படிச்சொன்னாள் என்பதுதான் அவனுக்குப் புரியாதபுதிராக இருந்தது.

கந்தசாமியைச் சகோதரனாக அல்ல, தான் பெற்ற பிள்ளையாகவே வளர்த்தெடுத்த அவள் அவன் படுத்துத்தலை சாய்ப்பதற்கே ஒரு இடமில்லாது அந்தரித்துக் கொண்டிருக்கும் இந்தச்சமயத்தில் அவனுக்கு ஆதரவு காட்டாமல் ஒதுக்கி விடுவாளா?

"அவன் எங்களோடை இருந்தால் என்ரை பிள்ளைகளின்ரை குறையளைத்தான் நெடுகப் பார்த்துக்கொண்டிருப்பான். பெத்தநான்தான் வில்லங்கப் படுகிறன். அவனாவது நல்லாயிருக்கவேணும். எங்கேயாவது தூரப் போயிருந்தால்தான் அவன் ஒரு மனுஷனாகத் தலை நிமிருவன். தான் குடியிருக்கிறதுக்கெண்டு ஒருதுண்டு நிலமாவது வாங்குவன் இல்லையெண்டால் அவனுக்கு நெடுக இது கரைச்சல்தான்.

சின்னக்குஞ்சியின் மனத்தில் ஓடிய எண்ணம் இதுதான் என்பது அவனுக்கெப்படித் தெரியப்போகிறது!

அவனால் அன்று வழக்கம் போல அங்கிருந்து தொழில் செய்வதற்குப் போகவும் முடியவில்லை.

சின்னக்குஞ்சி வீட்டிலிருந்து கிளம்பிய அவன் நேரே தும்பளையை நோக்கிச் சயிக்கிளைத் திருப்பினான்.

இன்னும்ஒருகிழமைக்குள்ளே எங்கே போறது? ஆர் இடந்தர போகினம்?"

அவன் மனத்திலெழுந்த வினாக்களுக்கு விடை காண இயலாது எதிர்காலம் அவனுக்குப் பயங்கரமாக இருண்டு கிடந்தது. (வளரும்)

## புதிய புத்தகம்

நூல் :—குமாரசுவாமிப் புலவர் பெற்ற கடிதங்கள்

ஆசிரியர் :— கு. முத்துக் குமாரசுவாமிப்பிள்ளை

விலை:—15-00 ரூபா

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் தாம் வாழ்ந்த காலத்தில் இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் வாழ்ந்த அறிவு புகழ்-பதவி என்பன பெற்றிருந்த அனைத்துத் தமிழறிஞர்களாலும் நன்கு மதிக்கப் பட்டவராவர். அப் புலவர் பெருமான் மீது அன்பும் அபிமானமும் கொண்ட பெரியார்கள் இவரைப் பற்றிக் கூறும் புகழுரைகளை புனைந்துரைகளென்று நிறுவுவதுபோலவும் திரு புலவவரர்களின் பெருமையை உள்ளது உள்ளபடிக் இக் காலத்திலும் இனி மேலும் உள்ளவர்கள் அறிதற்கு உபகாரமாகவும் வெளிவந்த அரிய நூலே "குமாரசுவாமிப் புலவர் பெற்ற கடிதங்கள்" என்னும் இந் நூலாகும்.

புலவர் காலத்தில் புகழ் பெற்று விளங்கிய அக் காலத்திய பெரும் புலவர்கள் குமாரசுவாமிப் புலவருக்கு எழுதிய 25 கடிதங்கள் இந் நூலில் இடம் பெற்றிருக்கின்றன.

இக் கடிதங்கள் ஒவ்வொன்றும் புலவரவர்களின் கல்விப் பெருமை, ஒழுக்கச் சிறப்பு, தமிழுலகத்திற்கு உபகாரமாக வாழ்ந்த தன்மை ஆகியவற்றையும் குவாரசுவாமிப் புலவர் மீது ஒவ்வொரு அறிஞரும் கொண்டிருந்த பெருமதிப்பையும் வெளிப் படுத்தியிருக்கின்றன.

பிற் சேர்க்கை உள்ள கடிதம் எழுதிய புலவர்களின் கையெழுத்துக்களும் இந் நூலில் அச்சிடப்படாத நூலாசிரியரின் கைவசமுள்ள கடிதங்களைப் பற்றிய பட்டியலும் இந் நூலின் பெறுமதியை அதிகரித்துள்ளன என்றால் மிகையாகாது.

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆலயத்தில் தேங்காய் உடைக்கும் போது...

ஆலயங்களில் நம் முன்னோர்கள் எந்தக்காரியத்தையும் நிறைவேற்றும் போது மட்டுமல்ல, காரியம் அதிர்ஷ்டம் தருமா என்பதையும் தேங்காய் உடைத்து அறிவது வழக்கம். இது பற்றி இன்றைய இளம் சந்ததியினருக்குத் தெரியாது. இதனை தேங்காய் உடைத்துப் பார்க்கும் சகுனம் என்கிறது சோதிடம்.

உடைக்கின்ற தேங்காய் முடிசிறுத்து மூன்றிலொரு பங்குடைந்தால் சந்தோஸம். ஐந்திலொரு பாகமாக உடைந்தால் நிரம்பியசெல்வம். சமனாக உடைந்தால் ஆண்டவன் அருள் கிட்டும்.

நீளமானதாய் பிளந்துவிட்டால் கஸ்டம். கண்தெரிய உடைந்தால் கவலை. துண்டாய் உடைந்தால் நோய்நொடி வரும்; முடிப்பகுதி இரண்டானால் பொருளழிவு. உடையாது விட்டால் குடும்பநாசம் என்கிறது

—ஜோஸ்யர் 'சச்சி'

## விண்ணினைச்சாடும் மனிதனின் சாதனை:

# வான்மண்டல ஆய்வில் தூரதிருஷ்டிக் கண்ணாடி

பெஞ்சமின் இராசரத்தினம்

வானமண்டல ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு அடிப்படைச் சாதனமாக விளங்குவது தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் (டெலெஸ்கோப்ஸ்) இதனால்தானே என்னவோ விஞ்ஞானிகள் இவற்றை வான மண்டலத்துக்கான பூமியின் யன்னல்கள் என்று குறிப்பிடுகின்றனர்.

கடந்த நானூறு ஆண்டுகளுக்கும்மேலாக தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் வான மண்டல ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் பலவிதமான அளவுகளிலும், அமைப்புக்களிலும் உள்ளன. எனினும் வானமண்டல ஆராய்ச்சியாளர்கள் இவற்றின் துணைகொண்டு குறிப்பிட்ட தூரம்வரையில் மாத்திரமே வானமண்டலத்தை நுணுக்கமாகப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

எதிர்காலத்தில் வானமண்டலத்தின் மிகநுணுக்கமான பகுதிகளைத் தெளிவாகப்பார்ப்பதற்கு உதவும் முகமாக சூப்பர் டெலெஸ்கோப்களை விஞ்ஞானிகள் தற்போது கண்டுபிடித்திருக்கின்றனர்.

மிகப்பெரிய கண்ணாடி ஒன்றில் தெளிவான ஒளிமிகுந்த பிம்பம் பிரதிபலிக்கும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் அமைக்கப்படுகின்றன. எனினும் அளவில் மிகப்பெரிய கண்ணாடிகளைப் பொருத்தித் தூரதிருஷ்டிக் கண்ணாடிகளை உருவாக்குவது அவ்வளவு எளிதான காரியமல்ல

இருபது அடி விட்டத்துக்கு கூடுதலான அளவைக்கொண்ட தூரதிருஷ்டிக் கண்ணாடிகளை உற்பத்தி செய்வதும் மெருகிடுவதும் கஷ்டமான காரியங்களாகும். இத்தகைய ஒரு கண்ணாடி சுமார் இருபது தொன் எடையுள்ளதாக இருக்கும் அத்துடன் அந்தக்கண்ணாடி ஆகாயத்தை அலகிடும்போது தொய்ந்துபோய் உருமாறிவிடுவதும்உண்டு. இந்தப் பிரச்சினைகளைசமாளிக்கும் நோக்கத்துடன்வானமண்டலஆராய்ச்சியாளர்கள் மிக நுணுக்கமான கண்ணாடிகளை உற்பத்தி செய்யும் உத்திகளை தற்போது கண்டுபிடித்திருக்கின்றனர்.

அலிசோனியா பல்கலைக்கழகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் மிகப்பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடி ஒன்றை மிகவும் வெற்றிகரமான முறையில் தற்போது உற்பத்திசெய்து வருகின்றனர்.

ஐம்பது அடி விட்டமுள்ள மிகப்பெரிய தூரதிருஷ்டிக்கண்ணாடியின் அமைப்பு ஒன்றுக்கு இந்த ராட்சத கண்ணாடியைப் பொருத்தமுடியும்.

முப்பத்துமூன்று அடி விட்டமுள்ள மற்றுமொரு தூரதிருஷ்டிக்கண்ணாடி ஒன்றின் அமைப்புக்குப் பொருந்தக்கூடிய கண்ணாடி ஒன்றையும் கலிபோர்னியாவைச்சேர்ந்ததொழில்நுட்ப பல்கலைக்கழக நிலையம் உற்பத்தி செய்ய இருக்கிறது. இந்த தூரதிருஷ்டிக் கண்ணாடியை உற்பத்தி செய்வதற்கு எட்டரை கோடி அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது கம்பியூட்டரின் உதவியுடன் இந்த தூரதிருஷ்டிக் கண்ணாடி இயக்கப்படும்.

ஆயிரத்து இருநூறுகோடி வருடங்களுக்கு முன்னர் வான மண்டலத்தில் தோன்றிய வாயு, மேகக்கூட்டங்கள் போன்றவற்றின் தன்மை குறித்து ஆராய்ச்சி செய்வதற்காக சூப்பர் ரெலெஸ்கோப்கள் தற்போது தயாராகி வருகின்றன.

பூமியில் பொருத்தப்படும் தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் மூலம் வானமண்டல ஆராய்ச்சிகளை மேற்கொள்வதில் ஆராய்ச்சியாளர்கள் தற்போது சில கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. வளிமண்டலத்திலுள்ள தூசி ஒளிக்கதிர்கள் போன்றவை வான மண்டலத்தின் தெளிவான தோற்றங்களைத் தருவதற்குத் தடையாக இருப்பதும் உண்டு. இதனை நிவர்த்தி செய்யும் விதமாக தூரதிருஷ்டிக் கண்ணாடிகளை வானவெளியில் மிதக்கவிடுவதற்கான நடவடிக்கைகளை விஞ்ஞானிகள் தற்போது மேற்கொண்டு வருகின்றனர். வாஷிங்டனிலுள்ள 'நாஸா' (NASA) என்ற விண்வெளி நிர்வாகஅமைப்பு 1986ம் ஆண்டில் ரொக்கட்டின் உதவியுடன் வானமண்டலத்தைச் சுற்றி வரும் தூரதிருஷ்டிக் கண்ணாடி ஒன்றை விண்வெளிக்கு அனுப்பிவைக்க இருக்கிறது.

இந்த நூதன தூரதிருஷ்டிக் கண்ணாடியை உருவாக்குவதற்கு 120 கோடி அமெரிக்க டொலர்கள் செலவாகும்என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. இந்த தூரதிருஷ்டிக் கண்ணாடி பூமியிலிருந்து 300 மைல் தொலைவில் வானமண்டலத்தைச் சுற்றிவரும். பூமியிலிருந்து வானமண்டலத்தில் உள்ளவற்றை பார்க்கக் கூடிய தூரதிருஷ்டிக் கண்ணாடியை விட பத்துமடங்கு தெளிவாக இந்த அதிசய தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் வானமண்டலத்தில் உள்ளவற்றைப்பார்க்க முடியும்.

இதைவிட" தூரதிருட்டிக் கண்ணாடியுடன் கூடிய செய்மதி ஒன்றை உருவாக்குவதிலும் அமெரிக்க இளம் விஞ்ஞானிகள் முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

வானமண்டல ஆராய்ச்சியாளர்களும் விஞ்ஞானிகளும் இனிமேல் இரவு நேரங்களில்

(8-ம்பக்கம் பார்க்க)

### வடக்கு எங்கே?

திசை காட்டும் கருவி
வடக்கையே
காட்டி
நிற்குமாம்.
ஆனல்
இப்பொழுது
வடக்கு -
திசை
அறியாமல்
நிற்கிறது!

— கணேஷ்



### பகையை வெல்லும் அன்பு!

அசோகன் நியாயப்படி அரசுகை முடிசூடப்பட வேண்டியவன் அல்ல. அரியணைக்கு ஆசைப்பட்டுத் தன் மூத்த சகோதரர்களையும், அவர்களின் மனைவியரையும் கொன்று பட்டத்தைக் கைப்பற்றினன். அவனது கோபத்திற்குச் சகோதரர்களின் குழந்தைகளும் தப்பிக்கவில்லை.

ஏனென்றால், அவர்கள் அவனது எதிர்கால வாரிசுகளாயிற்றே!

இந்த நிலையில் சகோதரனின் மனைவி ஒருத்தி தாயாகும் நிலையில் இருந்தாள். அசோகனிடமிருந்து தப்பிக்க அவள் ஒரு பௌத்த மடத்தில் சரணடைந்தாள். தன் உயிர் பிழைக்கவேண்டு மென்பதற்கு மட்டுமல்ல, தன் வயிற்றிலிருந்துபிறக்கப்போகும்சிசுஉயிர் பிழைத்து இந்த உலகைக் காண வேண்டும் என்ற விருப்பத்தாலும் தான்.

பல வருஷங்கள் சென்றன. சாம்ராட் அசோகன் கலிங்கத்தை வெற்றி கொண்டான். கண்களில் பரந்த சாம்ராஜ்யத்தைக் கண்ட களிப்பு. கால்கள் வெற்றிநடை போட நகர்வலம் வருகிறான் தனியாக. எதிரே ஓர் இளம் புத்தபிக்ஷு. "புத்தம் சரணம் கச்சாமி, தம்மம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி' உலகத்தவரின் உள்ளத்தில் அன்பு விளக்கை ஏற்றிய உத்தமரின் புகழ்பாடி வந்த அந்தத் துறவி அருகில்நெருங்கியதும், அசோகன் அவரைக் கூர்ந்து நோக்கினன். அவன் கண்களில் வியப்பு விரிந்தது. பாறையிடுக்கிலிருந்து நீர் கசிவது போல் இரத்த நாளங்களில் சிறு கசிவு.

"பிக்குவே! நான் யார் என்று உமக்குத் தெரியுமா?"- அசோகன் குரலில் ஆவல் தொனித்தது.

கலிங்கத்தை வெற்றி கண்ட மாமன்னன் அசோகச் சக்கரவர்த்தியைத் தெரிந்துகொள்ளாமல் இருக்க முடியுமா?"— துறவியின் இதழ்களில் மெல்லிய புன்முறுவல்.

சாதாரணமாக இந்தப் புகழுரையில் மயங்கும் மன்னனின் உள்ளத்தில் இப்போது சிறு மாற்றம்.

"அது மட்டும்தானா?... நான்... உனது... உமது சிறிய தந்தை என்று உமக்குத் தெரியாதா?"

"தெரியும்.

ஒற்றைச் சொல்லால் விடையளித்த துறவியின் கண்களில் அமைதி தவழ்ந்தது.

"அப்படியானால் நீங்கள் என்னை வெறுக்கவில்லையா?"

★ கமலா

"வெறுப்பா? துறவியின் மொழிகளில் வெறுப்பு என்ற சொல்லுக்கே இடமில்லை. மேலும் பகைமை, பகைமை உணர்வை வெற்றி கண்டதாகச் சரித்திரம் இல்லை" என்றார் புத்தபிக்ஷு. தொடர்ந்து அவர் எடுத்து வைத்த அடிகளில் நிதானம்.

அவர் சென்ற திசையையே நோக்கிய மன்னன் மலைத்து நின்றான். ஆசையால் உலகை வெல்ல நினைத்த அவனை அன்பால் வென்றுவிட்டார் துறவி. பின்னால் அவன் பௌத்தத் துறவியாகத் தன்னைப் புத்தரின் பாதங்களில் சமர்ப்பித்துக் கொள்ள உதவிய சிந்தனைத் துளி அன்று தோன்றியதுதான்.

நன்றி: இராமகிருஷ்ண விஜயம்

## நினைவில் நிறைந்த அரசியலார்சிலர்—13

# தீர்க்கதரிசி தந்தை செல்வா

எஸ். எம். ஜி.

தந்தை செல்வநாயகம் மறைந்து எட்டு வருடங்களாகி விட்டன. சென்ற 26ஆந் தேதி அவரது மறைவுதினம் அமைதியாக அனுஷ்டிக்கப்பட்டது. அதேபோல் கடந்த மார்ச் மாதம் 31ஆந் தேதி அவரது பிறந்த தினமும் அமைதியாகக் கொண்டாடப்பட்டது.

முன்னெப்போதையும் விட தந்தை செல்வாவை நினைவுகூரவேண்டியதன் அவசியத்தை நாட்டின் இன்றைய நிலை ஏற்படுத்தியிருக்கிறது.

கிழக்குமாகாணத்தில் இன்று நடைபெறும் சம்பவங்கள் தந்தை செல்வா உயிருடனிருந்தால் எப்படி மாறியிருக்கும் என்றகேள்வியையும் பலர் உள்ளத்தில் எழுப்பியிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஒருமைப்பாடும் தமிழ் பேசும் இனங்களின் ஒற்றுமையும் தந்தை செல்வாவின் உயிர் மூச்சு!

இன்று மாகாணசுயாட்சி யென்றும் மாநிலசுயாட்சி யென்றும் பிரதேசசுயாட்சி யென்றும் இலங்கையின் இனப் பிரச்சினைக்குப் பலரும் யோசனை கூறி சர்ச்சையாகவே இருக்கும்தேசிய அரசியல்பிரச்சினைக்கு முப்பத்தாறு வருடங்களுக்கு முன்னரே தீர்க்கதரிசனத்துடன் இணைப்பாட்சி என்னும் சமஷ்டி ஆட்சி அமைப்பு முறை ஒன்றே இலங்கையின் ஐக்கியத்தையும் அமைதியையும் நிலைநாட்டும் என்று கூறியவர் தந்தை செல்வா.

#### தந்தை செல்வா கூறியதை ராஜாஜி ஆதரித்தார்

1949ஆம் ஆண்டில் தந்தை செல்வா இலங்கையில் தமிழ் பேசும்இனம்தன்மானத்துடன் வாழ்வதற்கும் இலங்கையில் ஐக்கியம் பேணப்படுவதற்கும் சமஷ்டி ஆட்சி அமைப்பு ஒன்றேதான் வழி என்று கூறியதை 1958ஆம் ஆண்டு இலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்டபின் ராஜாஜி கருத்துத் தெரிவிக்கையில் சமஷ்டி ஆட்சி அமைப்புஒன்றுதான் இலங்கையில் இனப் பிரச்சினை தீரவழி என்று கூறினார்.

இதே கருத்தைத்தான் இன்று மாநில சுயாட்சியென்றும் பிரதேசசுயாட்சிஎன்றும் இலங்கை அரசியல் தலைவர்களும் இந்தியத் தலைவர்களும் கூறுகின்றார்கள். டில்லியில் நமது ஜனாதிபதி முதலில் ஒப்புக்கொண்டதும் பின்னர் 'சூழ்நிலைக்கைதி' என்று கூறி மழுப்பியதும் சர்வகட்சி மாநாட்டில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்தலைவரும் கிராமியக் கைத்தொழில் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கீகாரத்தோடு சமர்ப்பித்த இணைப்பு 'சி' என்ற திட்டமும் மாநில சுயாட்சி என்பதை அடிப்படையாகக் கொண்டதேயாகும்.

தந்தை செல்வாவை ஒரு தீர்க்கதரிசி என்று அன்று அவரது கொள்கையைப் பின்பற்றியவர்கள் கூறியதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் கூட இன்று "அவர்ஒரு தீர்க்கதரிசிதான்" என்று ஒப்புக் கொள்கிறார்கள்.

தந்தை செல்வாவுக்கு முன் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்குத் தலைமை தாங்கிய எந்தத் தலைவரும் மலைநாட்டுத் தமிழர்கள், இஸ்லாமிய மக்கள் முதலான தமிழ்பேசும் இனத்தின் ஐக்கியத்துக்காகவும் மலைநாடு, மட்டக்களப்பு, மன்னார், திருக்கோணமலை என்ற பிரதேசங்களின் ஒருமைப்பாட்டுக்காகவும் சிந்தித் துழைத்ததாகச் சொல்லமுடியாது.

#### இந்திய-பாகிஸ்தானிய குடியிருப்பாளர் சட்டம்

"1948 பெப்ரவரியில் முழுமையான ஆட்சிப்பொறுப்பு இலங்கைக்குக் கிடைத்தது. 1948 டிசம்பரில் இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் மீது முதற்பாணம் ஏவப்பட்டது. இந்தப்பாணம் தமிழர்களுள் மூன்றின் ஒரு பங்கினரின் குடியுரிமை வாக்குரிமை என்னும் உயிரனைய உரிமைகளை இழக்கச் செய்தது. 1948 டிசம்பரில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்திய-பாகிஸ்தானிய குடியிருப்பாளர் (குடியுரிமைச்) சட்டம்இலங்கையில் வாழ்ந்த தமிழர்களுள் மூன்றில் ஒரு பங்கினரை நாடற்றவர்களாக்கியது. தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருந்த ஒரே "பாவத்துக்காக"இவர்கள்வாக்குரிமை இழந்தனர் குடியுரிமை இழந்தனர். இந்த சமுத்திரத்தில் இவர்களைத்தூக்கி எறியாமல் விட்டது இலங்கைஅரசுசெய்த "புண்ணியம்"!

"திரு. சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அப்பொழுது பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். திரு. ஜி ஜி. பொன்னம்பலம் தலைமையில் அகில இலங்கைத்

(8- பக்கம் பார்க்க)

# இலக்கியச்சந்தி

# ஒரு நூலின் பிரசவத்திற்குமுன்பாக.....

வண்ணதாசன்

121274-

அன்புள்ள பரந்தாமன், என்னுடைய தொகுப்பை மனசுக்குள் இதுவரை எத்தனையோ தடவை உங்கள் மூலம் போட்டுப் பார்த்தாகி விட்டது. 'கலைக்கமுடியாத ஒப்பனைகள்' என்று பெயர்வைக்க நினைக்கிறேன் வைத்து விடலாமா? என்தொகுப்பு பிரஸ்ஸிற்குள் நுழைந்து விட்டது போலிருக்கிறது.

28775 உங்களுடைய பதில் கிடைத்தது. ரொம்பவும் இதமாக இருக்கிறது இந்த ஆடிக்காற்றைப் போல. என்னுடைய சந்தோஷத்திற்காக அச்சிட்ட ஃபாரங்களை அனுப்பிவாருங்கள். இதுகூட உங்களைக் கண்காணிக்க அல்ல. முன்பே எழுதினதுபோல், தலைப்பிள்ளைச் சூலியின் வயிற்றில் அப்பன்காரன் உள்ளங்கை விரலை வைத்து, 'ஊர்ந்து துடிக்கிறதைப் பார்க்கிற சந்தோஷத்துக்குத்தான்.

29975- உங்களுடைய வயிற்றில் உருவாகிற என்தொகுப்பின் ஒவ்வொரு பாரமும் சந்தோஷம் தராதா?

41175- மறுபடியும் மழைகாலம் வந்துவிட்டது இந்த மழை நாட்களிலாவது நான் ஒரு குடைவாங்கவேண்டும். இப்படி ஒருமழை நாளில்தான் சங்கரி பிறந்தாள். தகப்பனை என்சந்தோஷமும் நனைந்திருந்தது மழையில், சாக்கலெட்டும் நனைந்தது போல. அன்று இரவு, வெளியே மழைகோடிக்கால் பந்தலிட்டுக்கொண்டிருக்கும்போது நான் அடித்துப் போட்டதுபோல் தூங்கினேன். களைப்பினால் அல்லாமல், பலவீனத்தால் அல்லாமல் வேறு எதனாலோ, நான் தூங்கினேன். அதற்கப்புறம் அப்படி இன்னும் தூங்கவில்லை. சந்தோஷத்தினால்தான் அப்படித்தூக்கம் வந்தது என்றால் என்னுடைய அடுத்த தூக்கமான இரவு 'கலைக்கமுடியாத ஒப்பனைகள்' வெளியான, பிறந்த அன்றுதான் இருக்கும்.

3276-என்னுடைய தொகுப்பைப்பற்றி நீங்கள் அளித்திருக்கிற நம்பிக்கைகள் என்னை மறுபடியும் இந்த வாழ்வை, இலக்கிய ரீதியாகக் காதலிக்க வைக்கிறது. (காதல் என்பதில் மறுபடி உண்டா?) அதுவும் 15 கதைகளும் அடங்கின பதிப்பாக-பரந்தாமன் படைப்பாக-இதுவரையிருக்கிறதை உணர்கையில்- நிஜமாகவே ஒரு நிமிஷம் ரொம்பவும் ஆரோக்கியமான ஏழுகுதிரைகள் முன்கால்களைப் பாய்ச்சலுக்குத் தயாராக மடக்கிக் கனைக்கிற காட்சி தெரிந்தது உள்ளுக்குள்.

1276- இன்னும் விடியவில்லை. இலேசான வெளிச்சம் மட்டும் பின்னிலவுக் காலம் மாதிரி ஆனால், இந்தக் காலை அழகாயிருக்கிறது.

17276- மறுபடியும் என் கனவின் நதிகள் வருகின்றன. அப்படிவரும் கனவில் நதிகளுக்கும் வயல்களுக்கும் மேல் ஒருபுள்ளாகப் பறந்து நாட்களாகிவிட்டன. இப்போதும் கரையே தென்படாத, அகண்ட நதியின்பரப்புக்களுடைய கனவுகள்.

22276- 'காலம் தவறிய கலாப்ரிய வசந்தம்' என்று ஒரு கவிதை எழுதியிருந்தான். என் வசந்தங்கள் தவறுவதில்லை ஆனால் எப்போதும் பிந்திய வசந்தங்களாகவரும். 'கலைக்கமுடியாத ஒப்பனைகளும்' பிந்திய வசந்தமாக, ஆனால் நிச்சயம் வசந்தமாக என்னிடம் வரும். எஸ்தர் வெளிவந்ததற்காக ராமச்சந்திரன் எந்தசந்தோஷமும்அடையாதது போன்ற ஒருமனநிலையின் உயர்ந்த பட்சத்தை எப்போது பெறமுடியுமென்று தெரியவில்லை.

22376- இனிமேல் நீங்கள் தருகிற நம்பிக்கைகள் மட்டும் எனக்குப்போதாது. அஃ-இல் விளம்பரம் செய்தால் மட்டும் போதாது. முழுமையான புத்தகம் வேண்டும். என்னுடைய பெருந்தன்மையான பதினைந்து மாதக்காத்திருத்தலுக்கு நீங்கள் அர்த்தம்தர இதுவரை முன்வரவில்லை. எல்லோருக்கும் பதில்சொல்லிச் சொல்லி அலுத்தப்போய்விட்டது எனக்கு என்னால் இப்போது பதில் சொல்ல முடியாமல் போய்விட்டது.

1476- முப்பதடி ஆழத்தில் தண்ணீர்இருக்கஇருபத்தொன்பதாம் அடி தோண்டிவிட்டுச் சலித்துப் போக நான் விரும்பவில்லை. இன்னும் ஓரடி ஆழம் தோண்டும் வரை நம்பிக்கையுடனிருப்பேன். எனக்குத் தண்ணீர் கிடைக்கும்.

24476- அதுவரை (மே 31) அமைதியாக இருப்பது இரண்டு பேருக்குமே நல்லது என்றுதான் உங்களுடைய மார்ச் மாதக் கடிதம் முடிந்திருந்தது. என்றாலும் எனக்கு அமைதியாக இருக்க முடியவில்லை. ஏனென்றால் இது சுமத்தப்பட்ட அமைதி. 7576இன்னும்உங்களிடமிருந்து பதில் வரவில்லை. இரண்டு வரி எழுதக்கூடமுடியாத அளவுக்கு என்னை ஸ்நேகிதத்தின் + தொழிலின் எல்லையிலிருந்து தள்ளி வைத்திருக்கிறீர்கள். உங்களால் முடியாவிட்டால் உங்களைப் போலவே என்மீது அன்பு வைத்திருக்கிற கண்ணன் மாசிலாமணி மூலம் மீதியை முடிக்கவேண்டும். 8576- உங்களுக்குத்தொழில் முறையின் வெற்றிகரமாகச் செய்ய முடியாது. உங்களுடைய வெற்றியும், திருப்தியும் கலாபூர்வத்தோடு தான் நின்றுபோகும். சரியாகச் சொன்னால் உங்களுக்கு இல்லாத நடைமுறைப் புத்திசாலித்தனம் எனக்கும் இல்லாததாலும், உங்களுக்கு இருக்கிற கலையுணர்வு எனக்கு இன்னொரு வகையில் இருந்ததாலுமே- இது இப்படி முடிந்துவிட்டது. மறுபடியும் பேசி மறுபடியும் பணம் தயார் செய்கிற நம்பிக்கைகளுக்கு ஆளாக எனக்கு மனமில்லை. என்வாழ்க்கையின் நிலையும் அவ்வளவு விஸ்தாரமாகவில்லை. 'மே' கடைசிக்குள் என் புஸ்தகங்கள் வரவேண்டாம். தயவு செய்து என் கதைப்பிரதிகள் 15 ஐயுமாவதுஇந்தமே மாதத்துக்குள் எனக்குத் திருப்பி அனுப்பி வையுங்கள்.

26576- இந்தப் புஸ்தகத்தைக் கொண்டு வர நான் ஆசைப்பட்டிருக்கக் கூடாது.எழுதுகிறவனுக்குஇது லாயக்கற்றது என்று மேலும் மேலும் உண்மையாகி வருகிறது. ஒரு புஸ்கத்தைச்சொந்தச்செலவில் போடுகிறதற்கும் அது உடனடியாக விற்றுத் தீர்வதற்குமான ஒரு நல்ல அறிகுறி தமிழ் நாட்டில் இதுவரை கிடையாது. இட்டத்தட்ட மூவாயிரத்தைத் தொடப்போகிற இந்தப் புஸ்கத்தில் 300 பிரதிகள் மட்டுமே விற்று சுமார் ஆயிரத்தைந்நூறு மாத்திரம் கொஞ்சம் கொஞ்சமாக வந்து வர வரத் தீர்ந்து போகிற இந்த நிலைமையில் என் எல்லா நம்பிக்கைளுக்குமிடையே அனாவசியமாகக் குழப்பமுறுகிறேன், ஒரு உறுத்தல் தரும்படியாக முளைத்துக்கிடக்கிற இந்த இரண்டு மூன்று வருடக் கல் நீட்டல், வேகமாக நடக்க விழைகிற போதெல்லாம் என் பெருவிரலைக் காயப்படுத்திக் கொண்டிருக்கிறது. புத்தகம் எனக்கு வாழ்க்கையல்ல. இதை முடித்துத் தூக்கிப்போட்டுவிட்டு நான் வெகு தூரம் போகவேண்டும். ஒரு வகையில் பார்த்தால் சிறுபிள்ளைத்தனமாக இருக்கிறது எல்லாம். ஆனால் பணம் சிறுபிள்ளைத்தனமானதில்லை. ஒருவிதமானமுன்னைத்திருக்கிறது உள்ளே நெஞ்செல்லாம் கனத்து அழுகை போலக் கூட ஒன்று வருகிறது. என் வாழ்க்கைக்காக வேண்டுமானால் அழலாம். கேவலம் ஒரு புத்தகத்துக்காக நான் அழக்கூடாது.

5876- எந்தக் கலாவியக்கத்தின் விசுவரூபத்தினால் நான் கவரப்பட்டு என்தொகுப்பை உங்களிடம் நான் தந்தேனோ, அந்த விசுவரூபம் சிறுத்துப் போகக்கூடாது என்று தான் எனக்கு இப்போதும் தோன்றுகிறது. உங்களின் பொறுப்புணர்ச்சி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது என்பது எனக்குத்தெரிகையில் அதற்கான, அதன் பின்னிருக்கிற அவஸ்தைகளையும் என்னால் புரிய முடியும். உங்களை உலகத்துக்கு முன் நிரூபித்து விடுகிற அவசியத்துக்காவது ஒரு மிருதுவானமனிதனை இன்னொரு மிருதுவானமனிதன் ஏமாற்றமாட்டான்என்றுமற்றவர்கள்புரிந்து கொள்வதற்காகவாவது 'ஒப்பனைகள்' சீக்கிரம் முடிவடைய வேண்டும். எந்த வாரத்தில் உங்களை வந்து பார்த்தால் ரொம்ப நிமிரலான - குற்றவுணர்வற்ற- தொகுப்பை முடித்துவிட்ட சந்தோஷத்தில் இருக்கிறபரந்தாமனைப்பார்க்க முடியும்? இந்த ஆகஸ்ட் 22ல் நான் முப்பதாவது வயதில் நுழைகிறேன். எனக்கு என் முப்பதில் இடுகிற முதல் மாலை இந்தத் தொகுப்பாக இருக்கட்டும்.

9876- தனுக்கோடி அழகர் நேற்று- திங்கட்கிழமை தான் வேலையில் இணைந்தான் உங்களைச் சந்தித்த இரண்டு மணிநேரத்தில் வித்தியாசமான அனுபவங்களின் மறக்க முடியாமை பற்றி மறுபடி மறுபடி சொன்னான்- ப்ரூஃப் பற்றி, நீங்கள் காட்டின ஓவியங்கள் பற்றி, தொகுப்பின் நிலவரம் பற்றி-அநேகமாகச் சொன்னான். சந்தோஷம் இதையெல்லாம் கேட்டவுடன் நானும் உங்களை உங்கள் வீட்டின் சூழ்நிலையில் பார்க்கவேண்டும் போலிருக்கிறது. இப்போது பார்ப்பதைவிட என் தொகுப்பின் அச்சு வேலைகள் எல்லாம் முடிந்து நீங்கள் நிம்மதியாக உங்கள் நந்தலாலாவிடம் கொஞ்சிக்கொண்டிருக்கிறபோது கதவைத் தட்டலாம் என்று தோன்றுகிறது

18976 ஒரு நல்ல மனிதனின் மரணத்துடன்நேற்றையதினம் எங்களுக்கு விடிந்தது. அதன் வலிஇன்னும்மாறாமல்இருக்கையில்- நேற்று உங்களுடைய கடிதமும், 6வது பாரமும் வந்தன. ஒவ்வொரு தடவை ஃபாரம் வரும்போதும் 'ஏதாவது நாலு வரியாவது எழுதியிருக்கக்கூடாதா?' என்று தோன்றும். வருத்தமாக இருக்கும். இந்தத் தடவை நாற்பது சந்தோஷவரிகளை எழுதியிருக்கிறீர்கள் விரல் தொடுதலில் உயிர்பெறுகிற 'ப்ரெயில்' எழுத்துக்களைப் போல, என் விரல்களுக்கு உங்கள் கடிதத்தின் வரிகளைத்தொட்டுசந்தோஷம் உயிர் பெறுவதை உணர முடிகிறது. பூக்கடையின் சரிவான மேஜையில்ஏலத்துக்காகக் கவிழ்த்த மல்லி அரும்பு மாதிரி, பளீரென்று மஞ்சள் தாக்குகிற சிவந்திப்பூ மாதிரி- ஒரு பூச்சொரிவு உங்கள் கடைசிக் கடிதத்தில் இருக்கிறது. இன்னும் சரியாகச் சொன்னால் உங்கள் கடிதம் என்னைப் பூக்க வைத்தது. என் தொகுப்பின் அமைப்பின் பிரமாதத்தைப் பற்றி எனக்குச் சந்தேகமில்லை. மாஸ்கோ அச்சகங்கள் தருகிற ரசூல்கம்சதோவ் கவிதைப் புத்தகம் போல, இப்போது வெளிவந்திருக்கிற 'The Tender Muse' என்கிற கவிதைத் தொகுப்புப்போல எல்லாம் இங்கே உங்களால் கொண்டுவர முடியும் என் நீண்ட காத்திருத்தல் வீண் போகவில்லை.

இந்த இதமான நேரத்தில் எனக்குப் பிரியமான மனிதர்கள்கூட உட்கார்ந்திருக்க வேண்டும் போலிருக்கிறது மனசுக்குள்தான் இப்படி நினைத்தவுடன் உட்கார முடியும் என் புத்தகத்தை வெளியிட நிஜமாக விரும்பின கண்ணன் மாசிலாமணி, பிரியமான கங்கை, இந்தத் தொகுப்புக்கான அஃலை எழுத எனக்காகப் புறப்பட்டுப்போன கோபால், என் மென்மையான சகா ராமச்சந்திரன், அப்புறம் எனக்கு மனமாகவும் பணமாகவும் உதவின அம்பை பாலன், கோமா, ஆர். பாலு மிகவும் தற்செயலாக வெளியாகிவிட்ட தொகுப்பு விளம்பரத்தைப் பார்த்துப் பணம் அனுப்பி இன்றுவரை காத்திருக்கிற வா. மூர்த்தி, கலைஞாயிறு கருணாநிதி, கொ. ச. பலராமன்... எல்லாவற்றிற்கும்மேலாய்.. அச்சைக் கலையாக்கியிருக்கிற பரந்தாமன்.. எல்லோர் கூடவும் இப்போது உட்கார்ந்திருக்கிறேன். பிரியமானவர்களின் மத்தியில் இருப்பது சந்தோஷமானதாகவே இருக்கிறது.

ப்ரிய வண்ணதாசன்-கடன் வறுமையையும் கூட்டிக் கொண்டுவந்தது.

வறுமைக்கு நல்ல பசி. அது எங்களை வாங்கிக் கொண்டது. எங்களுக்குக் குச்சிக் கிழங்குகளை வாங்கினவள் சத்யா. இந்தத் தொகுப்பை நாங்கள் அச்சிட முயன்ற போதெல்லாம் சாப்பிடமுடியாமல் போனது சாப்பிட முயன்ற போதெல்லாம் அச்சிடமுடியாமல் போனது தவிர்க்கவேமுடியாத தருணங்களில் நாங்கள் தொகுப்புக்காக அனுப்பி வைத்த பணத்தை யோசித்து யோசித்து வேறு வழியேயின்றி சில நூறுகளை நாங்கள் பண்டமாற்றுச் செய்தோம்-பருக்கைகளாக. திடீரென்று ஒரு நாள் வந்த திருப்பத்தூர்க்காரர்கள் வீட்டாரிடம் விலைபேசி அச்சகத்தை தூக்கிக்கொண்டு போய் விட்டார்கள். அன்று மங்கலம் சந்திரசேகரனிடம் பேசிக்கொண்டிருந்த இலக்கிய பேச்சும், குடித்துக்கொண்டிருந்த கொத்தமல்லிக் காப்பி

## 'ஜராதுஷ்டிரன்'

யும் ரொம்ப ருசியாக இருந்தன இந்தத் தொகுப்பு மிக அழகாகவே வந்திருக்கிறது. என்றாலும் எனக்கான மன அமைதியற்ற நீட்சியின் சோகத்தில் அவசரமாக நேர்ந்துபோன சில கலாபூர்வமான குறைபாடுகளை இந் நூலின் இரண்டாம் பதிப்பில் நிவர்த்தி செய்து தொடுக்க எங்கிருந்தாலும் வருவேன். 'கலைக்கமுடியாத ஒப்பனைகள்' தாம் கடைசி 'எனக்குப் பசித்துக்கொண்டே இருக்கிறது' என்றஒருகவிதையில் எழுதியிருக்கிறேன். நான் சொன்னது 'எந்தப்பசியை?' என்று நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் பசியைப் புரிந்து கொள்வது என்பது எல்லாவற்றிலும் மேலான காரியம். கலைஞனை வீடுதான் முதலில் கொலைகிறது. ஓர் உண்மையான சோதனைக்காரனின் யுத்தம் வீட்டிலிருந்துதான் துவங்குகிறது. பார்வைதான் அந்நியமாதலுக்குக் காரணமாகிறது. அப்பாவையும், அம்மாவையும், நண்பர்களையும் ஏன் சமூகத்தையும் 'யாரோ' என்றாக்கி விடுகிறது மாட்டுத்தொழுவத்துக்குக் கொட்டகை போட என்று 'மின்சாரம் பாய்கிற

(10-ம் பக்கம் பார்க்க)

'கலைக்கமுடியாத ஒப்பனைகள்' வண்ணதாசனின் 15 கதைகளைக் கொண்ட நூல். ரூபா. 10/-விலையில் கவிஞரும், எழுத்தாளரும், ஓவியரும், 'அஃ' பத்திரிகையாசிரியருமான பரந்தாமன் அவர்களால், அவர்களின் பிருந்தாவனம் பிரின்டேர்ஸில் தயாரித்து, அச்சிடப் பெற்றது. 1976ஆம் ஆண்டில் தமிழில் வெளிவந்த நூல்களில் சிறந்த அச்சமைப்பும் புத்தகமைப்பும் கொண்டதென பாராட்டும் பரிசும் பெற்ற இந்நூலின் பிரசவத்திற்கு முன்பாக... சிறுகதை ஆசிரியருக்கும், பதிப்பாளருக்குமிடையில் ஒன்றரை வருடங்களாக நடைபெற்ற கடிதத்தொடர்பில்- முக்கிய வரிகள் திகதி வாரியாகச் சேர்க்கப்பட்ட கடிதச்சாரம்- முதலிலும் அவற்றிற்கான பதில் ஒரேகடிதத்திலும்... படியுங்கள்... சுவையான இலக்கிய அனுபவம் கிட்டும். படைப்பினையும் விஞ்சிநிற்கும் உணர்ச்சிக்கோலங்கள்... உண்மை விளக்கங்கள்.

### குழந்தைப்பாடல்

## பூங்குயில் கூவுது

பூங்குயில் கூவுது!
பூங்குயில் கூவுது!

பொழுது புலர்வதற்கு
பொற்கதிர் பூப்பதற்கு

தீங்கவி பாடுது!
தீங்கவி பாடுது!

தீயவை தீர்வதற்கு
தீபத்தை ஏற்றுதற்கு

மாங்குயில் கூவுது!
மாங்குயில் கூவுது!

மனமது மகிழ்வதற்கு
மங்களம் பொங்குதற்கு

செங்கவி பாடுது!
செங்கவி பாடுது!

செய்யுள் செழிப்பதற்கு
செந்தமிழ் வாழ்வதற்கு

—தா. தேவமதுரம்

## விஞ்ஞானி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்விழித்து தூரதிருஷ்டிக் கண்ணுடிக்கு அருகில் தவமிருந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படாது வானமண்டலத்திலுள்ளவற்றை தன்னியக்க முறையில் பதிவு செய்து அவற்றின் தன்மைகளை ஆராய்ச்சியாளர்களுக்கும், விஞ்ஞானிகளுக்கும் தெளிவாக எடுத்துக் கூறக்கூடிய அதிநவீன தூரதிருஷ்டிச் கண்ணுடிகளும் தற்போது உற்பத்திசெய்யப்பட்டு வருகின்றன.

இப்படியான ஒரு நூதன தூரதிருஷ்டிக் கண்ணுடியை உற்பத்தி செய்வதற்கு 15ஆயிரம் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

## புதிய புத்தகம்

[5ம் பக்கத் தொடர்ச்]

சி. வை. தாமோதரம்பிள்ளை உ. வே சாமிநாதையர், பொ. பாண்டித்துரைத்தேவர், ரா. ராகவ ஐயங்கார் முதலிய பிரபலஸ்தர்கள் குமாரசுவாமிப் புலவர் மீது கொண்டிருந்த பெருமதிப்பையிட்டு இக்காலத்தில் உள்ள யாழ்ப்பாணத் தமிழறிஞர்களும் பெருமிதம் கொள்ளலாம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் வாழ்ந்த வாழுகின்ற பெரும்புலவர்கள்மதிக்கத்தக்க வகையில் விளங்கிய குமாரசுவாமிப் புலவர் பெருமையை உணர்த்துவதோ இனி வரும் காலத்திலும் தமிழுலகம் முழுவதும் ஒருங்கு போற்றும்தகுதியுடையவராய் குமாரசுவாமிப் புலவர் போன்ற கல்வி ஒழுக்கம் பயன்பாடு என்பனவற்றுடன் ஒருவர் யாழ்ப்பாணத்தில் விளங்கினுல் அவரை அனைத்து தமிழறிஞர்களும் மதிக்கும் நிலை ஏற்படும் என்பதையும் இந் நூல் கூருமல் கூறுகின்றது என்றும் கருதலாம்.

—தி. பொன்னம்பலவாணர்

## இலக்கியச்சந்தி

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வயரில்" மோதுகிறது என்று. சாமி ஊர்வலம் போகும் போது இடிக்கிறது என்று. நான் சின்னச்செடியாகவைத்து வளர்த்த என் ப்ரிய வேப்ப மரத்தின் மூன்று பெரிய கிளைகளை வெட்டிவிட்டார்கள். பூவும் பிஞ்சுமாய் மீதம் இரண்டு கிளைகளே இருக்கிற இதன் நிழலில்தான் எங்கள் வீட்டு அடுப்பு இருக்கிறது- இன்னும்.

நன்றிகளுடன்

பரந்தாமன்

## தீர்க்கதரிசி

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்புரிமை பெற்றிருந்தார். இந்திய பாகிஸ்தானிய குடியிருப்பாளர் (குடியுரிமைச்) சட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட பொழுது எனது தலைவர் மூதறிஞர் செல்வநாயகம் இந்தச் சட்டத்துக்கு எதிராக வாக்களித்தார் அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ்கட்சியிலிருந்து விலகினுர். இலங்கைத்தமிழர்களின் உரிமைகள் ஒற்றையாட்சியின் கீழ்ப் படிப்படியாகப் பறிக்கப்பட்டுத் தமிழர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்கச் சிங்களத் தலைவர்கள் திட்டம் தீட்டி வருவதைத் தீர்க்க தரிசனத்துடன் எடுத்துரைத்தார்."

இப்படி அமரர் திரு. மு. திருச்செல்வம் கியு. ஸி. 'ட்ரயல் அட்பார்' நீதிபதிகளின் முன் ஆற்றியவழக்குரைவாதங்களைத் தொகுத்துக் கொண்ட தொகுப்பாகவெளியிடப்பட்ட "ஈழத்தமிழர் இறைமை" என்ற நூலில் குறிப்பிடுகிறுர்.

[மிகுதி அடுத்தவாரம்]

# மரத்துக்கு உயிர்கொடுக்கும் மனிதப் பிரம்மா!

உளியின் மெல்லிய சத்தம் கேட்கிறது அவர் வேலை செய்து கொண்டிருக்கிறுர்.

பிற்பகல் ஐந்து மணி மஞ்சள் நிறவெயிலின் பின்னணியில் மதுரை மீனுஷியம்மன் சிற்பத்தை அவர் உருவாக்கிக் கொண்டிருக்கிறுர். தூரத்தே சிற்பத்தை வைத்து அதன் அழகை அனுபவித்துக் கொண்டிருக்கிறுர்.

அவர் வேறு யாருமல்ல, கலாகேசரி ஆ. தம்பித்துரை நம்நாட்டிலும் மலேஷியாவிலும், சிங்கப்பூரிலும் தனித்துவமான கலைஞர் என்ற பெயர் இவருக்குண்டு.

சித்திரத்தேர்களைக் கலையம்சம் மிளிர நிர்மாணித்துத்தருவதில் இவருக்கு நிகர் இவரே.

○

அலுகோணத் தேர்.

இந்தியாவுக்கே புதுமையான யான தேர். முகபத்திரவேலைப் பாடுகள் அமைந்தவை.

கொக்குவில் சிவசுப்பிரமணிய புகுக்கோவிலுக்கு இந்தத் தேரை நிர்மாணித்துக் கொடுத்தவர் கலாகேசரி இத்தேரில் 15 யாழிகளின் அழகை ரசிக்க ஆயிரம்கண் போதாது

மாத்தளை முத்துமாரியமன் கோவிலுக்கு இவர் உருவாக்கிக்கொடுத்த 25 லட்சம் ரூபா பெறுமதியான சித்திரத்தேர் எரிக்கப்பட்டது. இன்றும் இவரது நெஞ்சத்தைவாட்டுகிறது.

சப்பரம் வடிவில் கோபுர அமைப்பில் அமைந்த தேர். துர்க்கை அம்மனுக்காக இவர் உருவாக்கிக்கொடுத்தது.

"சிறந்த கலைஞர் குடும்பத்திலே தோன்றி தந்தையின் பணிலைத்தானும் திறம்பட ஆற்றுவதற்கு முன்வந்து சிறந்த சிற்ப ஓவியப் படைப்புகளுக்குப் பொறுப்பாக அவற்றை நிறைவேற்றுவது மட்டுமன்றி மேலைத்தேசக் கல்வியையும்பெற்று தனது கலைகளைப்பற்றி ஆராய்வதிலும் எழுதுவதிலும் ஈடுபட்டு வருகிறுர் முன்னணிக்கலைஞர் கலா கேசரி அவர்கள். அன்னுர் அமைத்த மரச் சிற்ப வேலைப்பாடுகள் பற்றியும், அவருடைய ஓவியப் பணி பற்றியும் யாழ்ப்பாணத்தில் கலையில் ஈடுபாடுள்ள அனைவருமே அறிவர். சிறுபராயத்திலிருந்தே இப்பணியில் ஈடுபட்டுவருகிறுர்" என்று யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கா இந்திரபாலா கலாகேசரி எழுதிய யாழ்ப்பாணத்துப் பிற்காலச் சுவரோவியங்கள் நூலின் முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறுர்.

'கலையின் கலைக்கு ஒரு கலாகேசரி' என்று இவரைப் புகழ்ந்து பாராட்டினுர். மறைந்த இரசிகமணி கனக செந்திநாதன்,

இரசிகமணி இந் நூலில் எழுதியுள்ள ஒரு பகுதியில்-

"நான் 'அவர் வடித்த சிலைகளைப் பார்க்கிறேன்.


"ஒரு சிற்பமா? இரண்டு சிற்பமா? இல்லை, பத்து இருபதா? நம்பமாட்டீர்கள் அறுபத்திரண்டு சிற்பங்கள் ஆம், அறுபத்திரண்டும் தெய்வீக உருவங்கள்!

"தான்செய்து கொடுக்கப் போகும் சுதுமலை அம்மனின் சித்திரத்தேர் ஒன்றுக்காக அவர் இரவு பகலாகத்தனியே இருந்து கற்பனையில் மூழ்கி வடித்தெடுத்த சிற்பங்கள் இவை.

இவை ஒவ்வொன்றும் நமது பழைய புராணக்கதைகளையே பேசுகின்றன."

'கலைமடந்தையின் புதல்வன்' என்ற சிறியபுத்தகத்தை இரசிகமணி கனக-செந்திநாதன் அவர்கள் எழுதி வெளியிட்டிருக்கிறுர்கள்!

கலா கேசரி பற்றியும் அவர் தந்தை பற்றியும் இரசிகமணி இந்நூலில் எழுதியுள்ளார்.



கலாகேசரியின் கலைப்படைப்பான சூரனை இப்படத்தில் காண்கிறேம். இச்சூரன் மலேசியா காஜாங் ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோவிலில் உள்ளது. இத்தேவஸ்தான அழைப்பின் பேரில் அண்மையில் அங்கு சென்ற கலாகேசரிக்கு தேவஸ்தானத் தலைவர் திரு. எஸ். சுந்தரமூர்த்தி பொன்னுடை போர்த்தித் தங்கப்பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கின்றுர்.

திருநெல்வேலி ஆறுமுக சிற்பாசிரியாரின மகன்தான் தம்பித்துரை.

அவர் செய்த தேருக்கும், வாகனத்துக்கும் அந்தக்காலத்தில் தனி மதிப்பு

தந்தையாரின்தனித்தன்மை தான் தன்னை இத்துறைக்குக் கொண்டு வந்தது என்கிறுர் கலாகேசரி.

பரமேசுவரக் கல்லூரியில் 1950ல் எச். எஸ். ஸி. படித்துக் கொண்டிருந்தார் கலாகேசரி. அப்போது திரு. சிவபாதசுந்தரம் அவர்கள் அதிபராக இருந்தார்.

"என்வீட்டு நிலைமையை நன்குணர்ந்தவர் அதிபர். அப்போது நல்லூர் கைலாச வாகன வேலை என் வீட்டில் நடந்துகொண்டிருந்தது நான் கல்லூரிக்கு முந்திப்பிந்தப் போக அவர் அனுமதிப்பார். ஒருதடவை அரசாங்க உத்தியோகம் கிடைக்கவிருந்தது. அப்போதுஎன்னை திரு சிவபாதசுந்தரம் அவர்கள் கூப்பிட்டு 'சிற்பத் துறையில் முன்னேறு குலத்தொழிலை - ஓர்-வாகனம் செய்யும் வேலையையும்- பகுதி நேரங்களில் செய்யக் கூடிய வகையில் உள்ள உத்தியோகத்


### ராஜகோபால்

தைப் பார்க்க வேண்டும்' என்று வற்புறுத்தினுர். அவர் காட்டிய பாதையில் சென்றேன்' என்று பெருமையுடன் சொல்கிறுர் கலாகேசரி.

●

மரத்துக்கு உயிர்கொடுத்து அதனைப் பேசவைக்கும் சக்தி இந்த மனிதப் பிரம்மாவுக்கு உண்டு. இவர் கைபட்ட இடங்களெல்லாம் கலையம்சம் மிளிரும். காலத்தையும்வென்று நிற்கக் கூடிய விதத்தில் இவர் படைத்த சிற்பங்கள் கதை பேசுகின்றன. கலைத் தெய்வத்தின் காலடிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கலை வாழ்வு வாழும் கலாகேசரி தம்பித்துரையை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும்

வடபகுதிச் சித்திரக்கல்வி அதிகாரியாகப், பணியாற்றும் கலாகேசரி அவர்கள் உண்மையான கலைஞர்; நமக்குக் கிடைத்த வைரமான கலைஞர் அவர் நீடுழி வாழ வேண்டும்.




## நான்ஸியின் இரகசிய பயணம்

கொள்ளை முயற்சி தோல்வியுற்றதை யடுத்து பில்சைக்ஸ் நோய்வாய்ப்பட்டு பலநாள் படுக்கையில் கிடந்தான். நான்ஸி அவனுடனிருந்து கவனித்து வந்தாள்.

ஒருதினம் யூதன்பேஜின் பில்சைக்ஸைப் பார்க்க வந்தான். பிறகு பில் கேட்டுக் கொண்டதையடுத்து நான்ஸியை அழைத்துச் சென்று சிறிது பணம் அவள் மூலம் அனுப்புவதாக அவளைத் தன்வீட்டுக்கு அழைத்துச் சென்றுன் அங்கே நான்ஸியிடம் சிறிது பணம் எடுத்துக் கொடுப்பதற்கு முன் பலவிதமாக அரற்றிக் கொண்டிருந்தான் பேஜின் அச்சமயம் அங்குயாரோ வரும் அரவம் கேட்டது வந்தவன் விரைந்து உள்ளே வந்த போது 'பேஜின் அவனைத் தடுத்து வேறு ஒரு அறைக்குக் கூட்டிச் சென்றுன். அவர்கள் சென்றதும் நான்ஸி காலணியைக் கழற்றிவிட்டு அவர்களுக்குத் தெரியாமலே இருளில் மறைந்து மேல்மாடிக்குச் சென்று விட்டாள். ஒரு கால் மணி நேரம் போல் கழித்து நான்ஸி மெதுவாக அறைக்குத் திரும்பிவந்தாள். அதையடுத்து பேஜினும் மங்க்ஸ் உம் அறைக்குள் வந்தனர். பின்னர் அவசரமாகப் புறப்பட்டு மங்க்ஸ் வீதிக்குச் சென்றுன். நான்ஸி சற்று கலவரம் அடைந்திருப்பதை பேஜின் கண்டுகொண்டான், அதைப் பற்றி அவளிடம் கேட்கவும் செய்தான். அதற்கு அவள் எதுவும் கூறிவிடவில்லை, பிறகு பில்சைக்ஸ் கேட்டபடி பணத்தை எண்ணி அவளிடம் கொடுத்தான். நான்ஸி பணத்துடன் சைக்ஸ் இருந்த வீட்டுக்குத் திரும்பிவந்து அவனிடம் அப்பணத்தைக் கொடுத்தாள்

அடுத்த நாள் காலையிலே சைக்ஸ் குடித்தும் சாப்பிட்டும் பொழுதைப் போக்கினுன். ஆனுல் நான்ஸி அன்று முழுதுமே பதற்றத்துடன் இருந்தாள். அவளுடைய கன்னங்கள் வழக்கத்துக்கு மாருக வெளிறிப்போயும் கண்கள் நெருப்புப்போல சிவந்தும் காணப்பட்டன.

அன்றிரவு பில்சைக்ஸ் நன்ருக உறக்கத்தில் ஆழ்ந்திருந்த போது நான்ஸி மெதுவாகப் புறப்பட்டு வெளியில் சென்றுள் பின் ஹைட்பார்க்கிற்கு அருகிலுள்ள விடுதி யொன்றுக்குச் சென்று அங்கே தங்கியிருந்த மிஸ்மேலி ரோஸைச் சந்தித்தாள். பின் தன்னை யார் என்று விளக்கினுள்.

மங்க்ஸ் என்பவனை உங்களுக்குத் தெரியுமா" என்று கேட்டாள்.

"இல்லை ஒருபோதும் கேள்விப்பட்டதும் இல்லை".

(தொடரும்)

## சிறுகதை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தான். அவன்போகப்போகின்ற புதிய பாதையில் முதலாளி, தொழிலாளி என்ற பேதம் கிடையாது உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாடு கிடையாது. அங்கு அவன் தான் முதலாளி. அவன் தான் தொழிலாளி அங்கு வேலை நிறுத்தங்களோவேண்டாதஆர்ப்பாட்டங்களோ ஏற்படாது. அந்தப் புதிய பாதையில் தன் சொந்தக்கைகளை நம்பி சொந்தக்கால்களால் வீறுநடை போடப் புறப்பட்டு விட்டான் குமரேசன்.

(யாவும் கற்பனை)

## மக்கள்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

கின்ற பெரிய நகரங்களில் பெரும்பாலானவை தம்மிடையே உறவுகளை ஏற்படுத்திவருகின்றன.

'வாழ்வதாயின் நாம் எல்லோரும் ஒன்றாக வாழ்வோம்; அன்றி அணுவாயுதப் போரின் விளைவாக மடிய நேரிட்டால் ஒன்றாக மடிவோம்' என்பது இவர்களது கருத்தாகவுள்ளது

அமெரிக்காவிலுள்ள பாடசாலைச் சிறுர்கள், ரஷ்யாவிலுள்ள பாடசாலைச் சிறுர்களுடன் நட்பு ரீதியான கடிதப் போக்குவரத்துக்களை உருவாக்கி, அன்பையும் உறவுகளையும் பலப்படுத்திவருகின்றனர்

அமெரிக்காவில் இப்போது அமெரிக்கா-ரஷ்யா இணைப்புப் பால முயற்சிகளில் சுமார் பத்துப் பெரிய இயக்கங்கள் மிகவும் தீவிரமாக இயங்கிவருகின்றன. இவை ரஷ்யாவில் இருக்கின்ற மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் ரீதியிலான உதவிகளை வழங்கி, அமெரிக்காவுக்கு அழைத்து பாடசாலைச் சிறுர்கள் மத்தியிலும் மற்றோர் மத்தியிலும் சிநேகபூர்வமான நட்புறவுகளை வளர்த்துவரச் செய்கின்றனர்.

## கோதீவு–சங்குப்பிட்டி பாதை

(யாழ்ப்பாணம்)

கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதை இம் மாதம் எட்டாம் திகதி இயங்கும் என்று யாழ் அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் நேற்றுத் தெரிவித்தார். கால் நடைகளைக் கொண்டு செல்லவும் கொண்டு வரவுமே இப்பாதை அன்றைய தினம் காலை எட்டுமணி முதல் பகல் இரண்டரை மணி மணி வரை செயல்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## அமைதியாக ஆன்மீகப் பணிபுரிந்தவர்

காரை நகரிலே பிறந்து மலேசியாவிலே கல்வி கற்று இலங்கையிலே அரசதுறையில் பணிபுரிந்து இளைப்பாறிய பின் யாழ்ப்பாணத்திலே சமய சமூக சேவையாற்றிய தாமோதரம்பிள்ளை ஆறுமுகம் சபாரத்தினம் அவர்கள் 6-4-85 அன்று இறைவனடி எய்தினார். காரைநகர் களபூமியில் பிரபல்யமான குடும்பத்தில் 1913ம் ஆண்டில் பிறந்த திரு சபாரத்தினம் அவர்கள் 1914ம் ஆண்டில் மலேசியா சென்று கோலாலம்பூர்மெதடிஸ்தஆண்கள் பாடசாலையில் கல்வி கற்றார். அவரது தந்தையார்.

திரு. ஆறுமுகம் அப்பாடசாலையில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். மகன் சபாரத்தினம் திறமையான மாணவனாகக்கல்வி கற்று கேம்பிறிட் ஜ் சீனியர் பரீட்சையில் விசேடசித்தி பெற்று 1933 இல் இலங்கை வந்து சேர்ந்தார். இவர் அங்கு கல்வி பயின்ற போது திருவாளர்கள் கே. சி நித்தியானந்தன் பெனடிக்ட் பொன்னையா, மு திருச்செல்வம் கியூ ஸி. என் நடராசா கே. ஸி ஆகியோரும் இவருடன் கல்விகற்கும் வாய்ப்பை பெற்றனர்.

### ஐ. தி. சம்பந்தன்

ஆங்கிலத்தில் திறமையான பேச்சாளராக இவர் திகழ்ந்தார் இவரது ஆங்கிலப்பேச்சின் திறமையை தலைவர் ஜி ஜி பொன்னம்பலம் பெரிதும் பாராட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. சபாரத்தினம் அவர்கள் கொழும்பில் பொது வேலைப்பகுதித் திணைக்களத்தில் பணியாற்றிய போது கொழும்பு வை. எம். ஸி. ஏ. பேச்சாளர் அரங்கில் ஓர் உறுப்பினராக இருந்து ஆங்கிலத்தில் பல விவாதங்களை

(10ம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பழை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பவைபவங்களிலும் அவர் பாரியார் சகிதம் சென்று கலந்துகொண்டார்.

அவரிடம் காணப்பட்ட அதிகார தோரணையின் குரலும் எதையும் வெற்றிகொள்ளும் உறுதிமிக்க புன்னகையும் என்னைக் கவர்ந்த முக்கிய அம்சங்களாகும் அவர் மறைந்த போதிலும் அந்தக் கம்பீரக் குரலும் மதுரப் புன்னகையும் அவரை மறக்க முடியாமல் ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கின்றன.

## கடுகு

இயற்கையின் முன்பாக செயற்கை எம்மாத்திரம் என்பார்கள்!

கிழக்கை அன்று சூருவளி 'கற்பழித்த'போது, கூரைகள் தான் 'அப்பள'மாகின. 'சித்திரம்' பேச சுவர்கள் கம்பீரமாக இருந்தன. இன்று—

சரித்திரம் பேச 'சுவர்களு'ம் அங்கு இல்லை.!

– காரம்


ஸ்ரான்லி மினி
(சினிமா)
10-30, 2-30,
M. G. R. -K. R. விஜயா
நம்பியார்-அசோகன்
"தாழம்பூ"
5'X5' திரையில்

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2 00
கமலஹாசன்- ஜெயபிரதா
மஞ்சுபார்கவி
சலங்கை ஒலி
(ஈஸ்ட்மன் கலர்)
1984ம் ஆண்டின்
மிகச்சிறந்த படம்

றீகல்
தினசரி 10-30, 2-00
பாண்டியன், ரேவதி
நடித்த
பாரதிராஜாவின்
புதுமைப் பெண்
றீகல் மினி
10-30, 2-00 மட்டும்
CRVEL PASSION
(மிகக் கண்டிப்பாக
வயதுவந்தவர்களுக்கு
மட்டும்)

லிடோ சினிமா
"You dont Assign;
You Unleash Him"
Staring
Kenwahl-Alberta Watson
in
"THE SOLDIER"

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2 30
சிவாஜி, கே. ஆர். விஜயா
பிரபு நடித்த
நீதிபதி
(கலர்)

ஆனந்தி
வீடியோ சினிமா
[மனோகராவில்]
ராஜேஸ்-சரிதா-சுரேஸ்
வனிதா நடித்த
கொலுசு
[கல.]

S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
10-30 மு. ப 2-00 பி. ப.
சிவாஜி-பிரபு-ராதா
நடித்த
P S வீரப்பாவின்
நீதியின் நிழல்
4-?0 P M
EXORCIST
(Horror Film)

மொடேர்ன்
மினி சினிமா
[ஸ்ரீலங்கா அச்சக லேன்
ராஜா தியேட்டருக்கு
அருகாமையில்)
30-4-85 முதல்
ALICE GOOD BODY
கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்கு மட்டும்
10-30, 2-15, 4-15

ஹரன் சினிமா
தினசரி 10-30 — 2-30
250 நாட்களுக்குமேல்
ஓட்டியளித்த வெற்றிச்
சித்திரம்
மோகன் - பூர்ணிமா
வி தி
(கலர்)

வின்ஸர்
தினசரி 10-30, 2-00
4-15
Clint Eastwood
in
ESCAPE FROM
ALCATRAZ
மிகப் பிரபல்யம் வாய்ந்த
சிறைச்சாலையிலிருந்து தப்பியோடுவதற்குப் போடும்
பிரமாண்டமான திட்டத்தைச் சித்தரிக்கும் ஓவியம்

யாழ். வின்ஸர் மினி
தினசரி: 10-30. 2-30
பாண்டியன் - இளவரசி
நளினி- கவுண்டர்மணி
நடித்த
மண்ணுக்கு ஏற்ற
பொண்ணு
புதிய வெளியீடு

வாழ்க்கை வளம்பெற வழிகாட்டி
'ஷப்ரு'
உங்கள் முதலீடுகளுக்கு
அதி உயர்வட்டி
30%
வழங்கும் நிறுவனம்



SHABRA

★ நிதி உதவி!
★ நிலையானவைப்பிற்கு அதிஉயர்வட்டி!!
★ உழைக்கும் போதே சேமிப்பதற்கு புதிய வழி!!!
★ தவணை முறை கொள்வனவு வசதி!!!!
★ வெளிநாட்டு, உள்நாட்டு காசோலைகள் மூலமாகவும் நிலையான வைபபுக்கணக்கை (Fixed Deposit) ஆரம்பிக்கலாம்.
★ மாதாந்த சேமிப்புத்திட்டம் உழைப்பாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

நிறுவனத்தின் நிதிநிலைமை

| நிதியாண்டு | 1981/1982 | 1982/1983 | 1983/1984 |
|---|---|---|---|
| முதலீடு | ரூ. 178,700/= | ரூ. 500,000/- | ரூ. 1000,000/- |
| ஒதுக்கீடு | —— | 31,510/- | 321,810/- |
| வைப்பு முதல் | 1280,760/- | 4236,969/- | 123,98,671/- |
| கடன் பெறு முதல் | —— | —— | —— |
| வைப்பாளர்களுக்கு வட்டி வழங்கும் வீதம் | 191,019/- | 574,960/- | 24,77,997/- |
| வைப்பாளர்களுக்கு வழங்கிய வட்டி | 142,977/47 | 492,217/12 | 21,82,765/- |
| தேறிய லாபம் | 48,041/74 | 82,743/53 | 261,926/- |


31-03-85இல் மொத்தவைப்பு 300 இலட்சத்திற்கு மேல்

இயக்குநர்கள்:- எஸ். பாலசுப்பிரமணியம் (F.I.B Lond) கே. சண்முகம், சோ. பாலசுப்பிரமணியம்

SHABRA UNICO FINANCE LTD.

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலைபேசி இல: 589310

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22073




வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்ட அவசரகாலச்சட்டத்தில் கீழ் தடைசெய்யப்பட்ட கடல் பிரதேசத்துக்குள் மீன் பிடிப் பதற்கு அனுமதி வழங்கப் பட்ட விதிகளின் விபரம்:

இப்படத்தில் காட்டப்பட்டி ருக்கும் சதுரவடிவமான கறுப் புக் கோட்டுக்குள் அடங்கிய கடற் பிரதேசத்துக்குள் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட் டுள்ளது

கீழ்க்கண்ட நிபந்தனைகள் அடங்கும்.

(1) இக்கடல் பிரதேசத்துக் குள் அதிகாலை 4மணியிலிருந்து பிற்பகல் 4வரைமணி மட்டுமே நாளாந்தம் வள்ளங்களும், தோணிகளும் இருக்கலாம்.

(2) இவ் வள்ளங்களும் தோணிகளும் இக்கடல் பிர தேசத்தை நோக்கி அதிகாலை 4 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் இப்பிரதேசத்தை நோக்கிச்செல்லலாம்.

அதே தோணிகளும், வள் ளங்களும் மீன் பிடித்துவிட்டு பிற்பகல் 4 மணிக்குமுன்கரைக் குத் திரும்பிவிடவேண்டும்.

ஒவ்வொரு தோணிகளிலும் பூட்டப்பட்டிருக்கும் வெளி இணைப்புஇ யந்திரத்தின் குதி ரைச் சக்தியின் கூட்டுத் தொகை 15க்கு மேற்படக் கூடாது.

மீன்பிடிக்கச் செல்லும் தோணி - வள்ளங்களில் அனு மதிக்கப்பட்ட ஆட்களின் எண் ணிக்கை—

(ஏ) வெளி இணைப்பு இயந்தி ரம் இணைக்கப்பட்டதாயின் 3 பேருக்கு மேற்படலாகாது.

(பி) இயந்திரத்தால் இயங் கும் வள்ளங்களாயின் அதில் நான்கு பேருக்கு மேற்படலா காது. மா

# கடத்தப்பட்ட வர்த்தகர்:
## மனைவி உருக்கமான வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

ஒரு துரோகமோ, பாதகமோ செய்யாது இனத்துக்கும், சம யத்துக்கும் உதவிகள் பலசெய் துவந்த தமது கணவரை கடத் திச் சென்றவர்கள், மனிதாபி மான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு கோரி திருமதி பொன்னம்பலம் சம்பந்தப்பட் டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமைகாலை 9மணிக்கு சுண்டுக்குளியிலுள்ள தமது இல்லத்தில்வைத்து வர்த் தகரான கே. எஸ். பொன்னம் பலம் என்பவர் இனந் தெரியாத கோஷ்டியினரால் கடத்திச் செல்லப்பட்டதும் பின்னர் 16 லட்சம் ரூபா பண யம் கேட்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே.

கடத்தப்பட்ட வர்த்தகரின் பிள்ளைகளும் தமது தந்தை யாரை விடுதலை செய்யுமாறு பணிவான வேண்டுகோள் விடுத்துள்ளனர். (மா)

## அமைதிகாக்க....

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திப் பலரின்பாராட்டைப் பெற்றவர்.

1962இல் இவர் இளைப்பா றிய பின்னர் யாழ்ப்பாணப் ஆனைடபந்தியில் உள்ள தமது இல்லத்தில் வசித்துவரும் காலத்தில் யாழ்ப்பாணப் பாங் சலை வீதியில் உள்ள குருபாவா ஆச்சிரமத்துக் குருவுடன் ஏற் பட்ட தொடர்பால் ஆத்மீக சேவை செய்யும் வாய்ப்பு ஏற் பட்டது. குருபாவாவின் தெய் வீகக்கருத்துக்களை ஆங்கில மொழியில் பெயர்த்து அகில உலகம் அறியவைத்தபெருமை இவருக்குண்டு. இவருடைய மொழிபெயர்ப்பு நூலாகிய 'Divine Luminius wisdom' அமெரிக்காவில் மிகப் பிர சித்திபெற்று விளங்குகிறது. இந்நூலை ஆங்கிலத்தில் திறம் பட எழுதியபடியால் குரு பாவா அவர்கள் அமெரிக்கா வரை சென்று தமது தெய் வீகக் கருத்துக்களைப் பரப்ப முடிந்தது;

பல ஆக்க பூர்வமான பணியை ஆற்றிய திரு: சபா ரத்தினம் அவர்கள் அமை தியாக வாழ்ந்து அமைதியாக அமரத்துவம் அடைந்துவிட் டார். அன்னாரின் ஆத்ம சாந்தி யடைய பிரார்த்திப்போமாக.

## யாழ்ப்பாணத்தை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளனர். நடையாகவும், சைக் கிள்களிலும் நெடுந்தூரமுள்ள கிராமங்களில் தஞ்சமடைந் துள்ளனர்

குறிப்பிட்ட கருங்காலி கிரா மப் பகுதி மக்கள் நிலைபற்றி எதுவும் அறியமுடியவில்லை

நேற்று முழுநாளும் காரை நகர் - யாழ். போக்குவரத்து பஸ்சேவை நடைபெறாததால் அங்குள்ள நிலைமை அறியமுடி யாததும் ஒரு காரணமாகும் [மா]

## பாதயாத்திரை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சென்னை வரையிலான இப் பாத யாத்திரையில் சுமார் 625 கிலோ மீட்டர் தூரத்தை ஜனார்த்தனன் குழு கடந்திருந் தது குறிப்பிடத்தக்கது

சென்னை வந்த இப்பாத யாத்திரைக் குழுவை த. வி. கூட்டணித்தலைவர் எம். சிவ சிதம்பரம், முன்னாள் யாழ். எம். பி. வெ. யோகேஸ்வரன், திருமலை முன்னாள் எம். பி. இரா. சம்பந்தன். திராவிடக் கழக பொதுச்செயலாளர் கே. வீரமணி ஆகியோர் வரவேற் றனர் (கி)

## ஆசைக்கு வயதில்லை

(யாழ்ப்பாணம்)

மூன்று பிள்ளைகளைப் பெற் றெடுத்த 35 வயது தாயொ ருத்தி 18 வயது இளைஞருடன் தலைமறைவாகிவிட்டாராம்!

கோண்டாவில் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கைப்பிடித்த கணவன் எவ் வளவோ கெஞ்சி மன்றாடியும் அந்தத்தாயானவள் தமது பிடி யில் இருந்தும் சற்றேதும் வழு வவில்லையாம். (மா)

## ஐந்து அம்சத்திட்டம்

[மாவிட்டபுரம்]

வடபகுதி தொழிற்சங்கக் கூட்டுக் குழுவால் ஜனாதிபதி க்கு கொடுக்கப்பட்ட ஐந்து அம்சத்திட்டத்தை நிறை வேற்றதென்இலங்கைதொழிற் சங்கங்களும் உதவக்கூடிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மா னம தெல்லிப்பளையில் நடந்த மேதினத்தையொட்டிய கருத் தரங்கில் நிறைவேற்றப்பட் டது.

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் இன்று நடந்த மேதினக்கருத்தரங்கில் ஏராளமான தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட னர்.

கருத்தரங்குக்கு தலைமை வகித்த தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் பேசுகை யில், கடந்த காலங்களில் நாம் ஊர்வலம் நடாத்தி கூட்டம் நடாத்திவந்தோம். ஆனால் இம்முறை எதற்கும் அனுமதி தரவில்லை. இச்செயல் எம் தொழிலாளர்களுக்கும் எதி ரான நடவடிக்கையாய் இருக் கிறது அரசு இப்படி நடப்பது தவறானதாகும் என்றார்.

வடபகுதி தொழிற்சங்கக் கூட்டுக்குழுவின் பிராந்தியக் கிளைகளாகதெல்லிப்பளை, பருத் தித்துறை, தீவுப்பகுதி, யாழ்ப் பாணம் ஆகியன இயங்க நட வடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பஸ்ஸுக்கு

(1ம் பக்கத்தொடர்ச்சி)

லுள்ள காட்டுப்பிரதேசத்துக் குக் கொண்டு செல்லப்பட்ட தாகவும், அங்கு வைத்தே பஸ்ஸுக்கு தீவைக்கப்பட்ட தாகவும் புகார் செய்யப்பட் டுள்ளது.

பஸ்ஸிலிருந்த சுமார் 40 பிர யாணிகளில் பலர் கொழும் புக்கும், சிலர் யாழ்ப்பாணத் துக்கும் கவலையுடன் திரும்பி னராம். மா

## யாழ். நகரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரோடை சுன்னாகம் ஆகி யோரே பலியானவராவர்.

யாழ். தபால் நிலையத்துக் கண்மையில் இத்துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம்இடம் பெற் றது. (மா)

## தட்சரின் செல்வாக்கு சரிவு!

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சரின் கன்சர் வேட்டிவ் கட்சியின் அரசியல் செல்வாக்கில் சரிவுநிலைதோன் றியுள்ளது.

நேற்று முன்தினம் பிரிட்ட னில் இடம்பெற்ற உள்ளூராட் சித் தேர்தல்களில் கன்சர்வேட் டிவ் கட்சி பல இடங்களில் தோல்வி கண்டுள்ளது.

திருமதி தட்சரின் கன்சர் வேட்டிவ் கட்சியினது இத் தோல்வி எதிர்காலத்திலும்இக் கட்சியை மேலும் பலவீனமாக் கலாம் என்று கூறப்பட்டது. (கி)

## கிழக்கு மாகாண...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விரைவில் தமிழகம் செல்ல விருப்பதாகத்தெரியவருகிறது.

ஜனாப் எம். எம். முஸ்தபா, ஜனாப் மௌசூர் மௌலானா, ஜனாப் ஏ. எஸ். மஜீத், ஜனாப் ஹமீட் ஆகியோரும் தமிழகம் செல்லவிருக்கும் குழுவில் அடங்குவர் எனத் தெரிவிக்கப் படுகிறது. (க-மா)

## பூசகருக்கு நேர்ந்த கதி!

(புத்தளம்)

புத்தளம் உடப்பு அம்மன் கோவில்பூசகர் ஒருவர் துப்பாக் கிச் சூட்டுக்குப் பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை மேற்படி ஆலய முன்றலில் உள்ள மரம் ஒன் றில் பூசகரின் சடலம் தலைகீ ழாகத் தொங்கிய நிலையில் கட்டப்பட்டிருப்பதாக கூறப் படுகிறது.

இதனைத் தொடர்ந்து இப் பகுதியில் பெரும் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. (மா)


## மரண அறிவித்தல்
### வே. க. இராசலிங்கம்

திரு. வே. க. இராசலிங்கம் பிரபல வர்த்தகர் (கனக லிங்கம் சுருட்டு) காலமானார். அன்னார்மனோன்மணியின் அன்புக் கணவரும், திரு. சுந்தரலிங்கம் (நியூ பார்மஸி மானிப்பாய்), திரு. குணராஜா (கனகலிங்கம்பிள்ளை அன் சன்ஸ் கொழும்பு), திரு. துரைரட்ணம் (யாழ். அரிசி ஆலை மானிப்பாய்), திரு பரஞ்சோதி (இராசலிங் கம் அன் சன் மானிப்பாய்), காலம்சென்ற திருமதி சிவ ஞானம்பிகை பாலசுந்தரம், திருமதி பேரானந்தம் விசாகப்பெருமாள், திருமதி புஸ்பம் பாஸ்கரசுந்தரம் (விவேகானந்தா மகா வித்தியாலயம் கொழும்பு) ஆகி யோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் திங்கட்கிழமை காலை 6-5-85) காலை 10 மணிக்கு வசந்தம் மானிப்பாயில் நடைபெற்று பூத வுடல் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

3138 மனைவி, மக்கள்.


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச் சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu. P. O. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126